உ

ஸ்ரீராமஜெயம்

# கோயிற்கலம்பகம்

என்கின்ற

# திருவரங்கக்கலம்பகம்.

## மூலமும் - உரையும்.

இஃது,

அழகியமணவாளதாசர் என்கிற

திவ்வியகவி

பிள்ளைப்பெருமாளையங்காரவர்கள்

அருளிச்செய்தது.

இஃது

கோகுலாபுரம்

அருணாசலமுதலியாரால்

பரிசோதித்து


**Printed by**

Tiruppathy Ruthna Moodelliar

son of

Tiruppathy Vencatachella Moodelliar's

*Kalaigyana Mutthiratchara Press,*

*No. 6 Moothookristnan Street Black Town,*

*Madras.*

1886


பட்டண-அவை

திருவழகின்யவை

) புயந்தவம்வண்டம்

- மிக்கமறங்காலத்த


ROJA MUTHIAH

KOTTAIYUR-623 106

TAMILNADU - INDIA




உ

கடவுள்துணை

# விளம்பரம்.


இதனால் சகலமானவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில் சென்னைப்பட்டணம் பெத்துநாய்க்கன்பேட்டை முத்துகிருஷ்ணன் வீதியில் -௬-வது நெம்பர் வீட்டில் கலைக்கியானமுத்திராக்ஷரசாலை என்னும் அச்சுக்கூடத்தில் கணேசர்ஜாவளி சரஸ்வதிஜாவளி பழனியாண்டவர்ஜாவளி இரண்டாவதுபாகமும் இன்னும்பலவிதமான ஆந்த்ரத்ராவிட கீர்வாண புத்தகங்களும் அகஸ்தியர்முதலியபெரியோர்கள் திருவாய்மலர்ந்தருளிய வைத்தியசாஸ்திரங்களும் தெலுக்கு புத்தகங்களும் துலுக்கு புத்தகங்களும் இருக்கின்றமையால் வேண்டியவர்கள்விலைசரசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கி

☞ தி-இரத்தினமுதலியார்.

இப்புத்தகம்-விலை- அணா-௨,

ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்



# திருவரங்கக்கலம்பகம்.

## மூலமும் - உரையும்.

தனியன்-நேரிசைவெண்பா.

ஆழ்வார்முன்பின்னவர்க்கு மாமறைதந்தார்தமிழால்
வாழ்வார்மணவாளா மாணபவருட்-டாழ்வாரும்
எம்போலியர்க்கு மிரங்கியரங்கக்கலம்ப
கம்போத நல்கவைத்தார்காண்

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

சொன்னோக்கும் பொருணோக்குந் தொடைநோக்கு நடைநோக்குந் துறையினோக்கோ, டென்னோக்குங்காணவிலக்கியமாவதன்றியிதிலீடுபட்டோர்,கன்னோக்கும்புத்தியும்பத்தியும்பெறுவர்முத்தியுண்டாமெனச்சொல்கேன்,பன்னோக்கமணவாளர்பகராம்பக்கலம்பகத்தைப்பாரீர்பாரீர்

காப்பு-கட்டளைக்கலித்துறைகள்

மறைப்பாற்கடலைத்திருநாவின் மந்தரத்தாற்கடைந்து
துறைப்படுத்தித் தமிழாயிரத்தின் சுவையமிர்தங்
கறைப்பாம்பணைபள்ளி யானன்பரூட்டக்களித்திருந்த
இறைப்பொன்கழலன்றிச் சன்மவிடாய்க்குநிழலில்லையே

என்றக்கவிமுதனான்குகவியுந் துதிகவியாக முற்கூறப்பட்டன-அவைவருமாறன்றியுந்திருவரங்கேசருடையசரித்திரங்களையுந்திருவழகினவயவங்களையுமெடுத்துக்கொண்டு (வெண்பாவைக்கும்) புயந்தவம்வண்டம்மானைப்பாணமதங்கி,கைக்கிளை,சிற்றாசல்களிமடக்கு - மிக்கமறங்காலத்த

ழையிரங்கல்-சம்பிரதங்கார் தூது,கோலுங்கலம்பகத்தின்கூறு என்னுமிக்லம்பகம்பாட்டியலில்வித்துவசிரோமணியாய்-விப்பிறவிலோத்துங்காய் திருவவதாரஞ்செய்தருளிய அழகியமணவாளதாசனானவர்- தொகுத்துச் சொல்லுஞ்சூத்திரமிதுவாதலானும்முனிபுங்கவராகிய அகஸ்தியராற்சொல்லப்பட்ட அருந்தமிழ்மொழி-வழக்கமாதலானுங்கற்குமவர் கருத்திற்கும் நாற்குஞ்சொற்சுவை-பொருட்சுவை-தோன்றச்செய்தவையானும்- இம்மை மறுமையென்னுமிருமைக்குந்துணையாய்- நன்னெறிபயக்குமென்பதனானும்-உரையெழுதவேண்டிவிருப்பின்மையால் சிற்றறிவுடையேனாதலால்என்னறிவினில் அறியுமிலக்கியங்களுட் சிறிதுமறிந்தானன்றே-ஆயினும்நன்மையால்பயனறிந்தீடேறவேண்டுமென்னுமாசையெனக்குமென்சொல்வழிகேளாதுவாதிக்கத்தொடங்குதலால்-நீரளவேயாகும் நீராம்பற் றான்கற்ற நூலளவேயாகும் நுண்ணறிவு-என்பதும் (தொட்டனைத்தூறு மணற்கேணிமாந்தர்க்குக்-கற்றனைத்தூறுமறிவு)என்பதுவும்போலயானந்த வளவின்உரைஎழுதினேனாதலால்இவ்வாறெழுதியவுரைகொண்டுந் -திருவரங்கேசருடையசிறப்பினைச்சொல்லும்வேறுமுள்ள நூல்களைக்கொண்டும் முழுதுணர்த அந்தணர்முதலியமூதறிவோர்சொல்லும் உபதேச முறைமையைக்கொண்டும்இதின்பொருளினதுவிரிவெல்லாமறிந்துகொள்க.

இதன்பொருள்.

இருக்குவேதம்-ஏசுறுவேதம்-சாமவேதம்- அதரணவேதமென்றுசொல்லாநின்றநான்குவேதமாகியதிருப்பாற்கடலைதம்முடைய அழகியநாவாகிய மந்தரகிரிஎன்னும்மத்தினாலேகடைந்த-இயலிசை - நாடகமென்னுமுத்துறைமுதலாகிய-துறையினிடத்திற்சேர்த்தியதென்கலையின் முதன்மைபெற்ற ஆயிரப்பிரபந்தமானவதிகரசமிகுந்த அமிர்தத்தை கரியவிடத்தைக்கண்டத்திலுடைய கட்செவியாகிய வணையிற் பள்ளிகொண்டருளிய ஸ்ரீரங்கநாயகருடைய திருவடிக்கன்பாளர்கூட்டமுழுதுமனக்களிகூர்ந்துபானம் பண்ணப்பண்ணப் பரிபூரணமாகநிறைக்கப்பட்ட நம்மாழ்வாருடைய ஸ்ரீபாதபற்பநிழல்அல்லதுபிறக்கிறதுமிறக்கிறதுமாரும் நமதிருவினை வெப்பவேதனையால் வந்தவிடாயானது தீருதற்குப்பெகியாதவேறு நிழல்காணேன்-எ-று (க)

வேதந்தொகுத்துத்தமிழ்ப்பாடல்செய்த விமலன்பொய்கைப்
பூதன்மயிலையர்கோன்புகட்சேரன் புத்தூரன்றொண்டர்
பரதந்தருந்துகண்மாமழிசைக்கு மண்பாணன்மங்கை
நாதன்மதுரகவிகோதை பாதங்கணண்ணுதுமே.

(என்பது)முன்கூறப்பட்ட நான்குவேதசாரத்தையுந் தொகுத்துத்தமிழ்ப்பாடலாகச் சாற்றியருளி நிருமலனாகிய சடகோபாழ்வார் பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார்பேயாழ்வார் குலசேகராழ்வார்பெரியாழ்வார்தொண்டரடிப்பொடியாழ்வார் திருமழிசையாழ்வார் திருப்பாணாழ்வார் திருமங்கையாழ்வார் மதுரகவியாழ்வார் என்னும்இவர்கள் பாதமலரைப் பரமென்றடைந்துவாழ்வாயென்றவாறு உ

பிடிக்கும்பரசமயகுலவேழம் பிளிரவெகுண்
டிடிக்கும்குரற்சிங்க வேறனையாறெழுபாருமுய்ய
படிக்கும்புகழெம்மி ராமானுஜமுனிபல்குணமும்
வடிக்குங்கருத்தினர்க்கே திருமாமணிமண்டபமே

(என்பது)தங்கள்தங்கள் சமையமேசமையமென்னு மதானுசாரமாக வேறில்லையென்று பிடிவாதமாகப்பிடித்துப் பேசப்பட்டதையா யிகம்வைசேடிதம் உலகாயுதம் மயகசம் அருகம் அந்தமுதலாகிய யானைக் கூட்டங்களை வீறிட்டலற இடிமுழக்கம்போலக்கெற்சிக்கற கண்டத் தொனியையுடைய வொருஆண்சிங்கம்போலப் பராக்கிரம முடையவர் பூலோகம் புவலோகம் சுவலோகம் மகாலோகம் சனலோகம் தவலோகம் பத்தியலோகமானமேலேழுலோகமும் அதலவிதல சுதலநிதலகிராதலதராதல மகாதலமான கீழேழுலோகமுன்சொல்லித்துதிக்கும் புகழினையுடையவராகியவெம்பிராமானுஜமுனீசுரனாருடைய பலபலகுணாதிசயங்களையும் நாவினுக் கிரகமுறவடித்துச்சொல்லுங் கருத்தினையுடையபேர்களுக்கும் அதன்றி மற்றப்பேர்களுக்குக்கிடைக்குமோ வைகுந்தத்திற்திருமாமணிமண்டபமாகியமுத்திமண்டபமென்றவாறு ங

வானிட்டகீர்த்திவளர் கூறத்தாழ்வான்மகிழவந்த
தேனிட்டதார்நம்பெருமாள்குமாரர்-சிவனையயன்
தானிட்டசாபந் துடைத்தாளரங்கர்சங்காழிபுயம்
நானிட்டனென்றருள் பட்டர்பொற்றாள்கதிநந்தமக்கே

(என்பது) வானுலகமளாவிய கீர்த்தியானது வளராநின்ற கூறத்தாழ்வாருடையதிருவுளமகிட்சி யடையத்தக்கதாகிய மகவாய்வந்தவர் அதுவுமன்றியும் வண்டுகள்படியப்பட்ட மணமாலைதருளியவரங்கநாயகரருளால் உசையஞ்செய்கையால் நம்பெருமாள்குமாரனென்றும் ஒருபேர்சொல்லப்பட்டவர்சிவனானவர் பிரமதேவனுடைய சிரசைச்சிதையாமல்பிரமதேவனிட்டசாபத்தைத்தீர்த்தவராகிய திருவரங்கேசருடைய அடையாளமுத்திரா

யாகியசங்குசக்கரத்தை யெனதிரண்டு புயத்திலுந்தரித்து நானிட்ட நாக மூங்கில்றிரங்கி யிரட்சித்தருளிய பராசபட்டர்என்பவர்களுடைய பொற் பாதமே நமக்குக்கெதியென்றுபோற்றல் செய்வாமென்றவாறு ௬

துதிகவி-முற்றும்

## நூல்.

### மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா

### இவை எட்டடித் தாவுகள்.௨

சீர்பூத்தசெழுங்கமலத் திருத்தவிசின் வீற்றிருக்கும்
நீர்பூத்ததிருமகளு நிலமகளுமடிவருடச்
சிறப்பறவைபுறங்காப்பச் சேனையர்கோன்பணிகேட்ப
நறைப்படலைத்துழாய்மார்பி ஞாயிறுபோன்மணிவிளங்க
அரியதானவர்க்கடிந்த வைம்படையும்புடைதயங்கக்
கரியமால்வரைமுளரிக் காடீன்றுகிடந்தங்குப்
பாயிரநான்மறைபரவப் பாற்கடலுற்பருமணிச்சூட்
டாயிரவாய்ப்பாம்பணைமேலறிதுயி லினிதமர்ந்தோய் ௧

மண்ணகந்துயர்நீகக வானகந்தொழுதேத்தக்
கண்ணகன்சோணாட்டுக் காவிரிவாய்ப்புள்ளினத்துப்
பம்புகதிர்விசும்பிரவி பசும்புரவிவழிவிலக்கு
செய்பொன்மொழிலேழுடுத்த திருவரங்கப்பெருங்கோயில்
ஆணிப்பொற்றகடுரிஞ்சு மணிக்கதவுநீள்வாயில்
மாணிக்கவெயில்பரப்பும் வைரமணிவிமானத்துள்
மின்னிலங்குதொடிவலயன் வலக்கைகீழ்கொடுத்தும்
தென்னிலங்கைத்திசைநோக்கி திருநயனந்துயில்வோம்கேள், ௨

(எ-து) சீர்மையுஞ் செழுமையும்விளங்கிய செவ்விய தாமரையாகிய அழகியவாசனத்தில் வீற்றிருக்கததக்ககுணமுண்டான சீதேவியும் பூமாதேவியுந் திருவடித் தாமரைகளைத தங்கள்கைகளினால் வருடும்படியாகவுஞ் சிறகினையுடைய பறவைவேந்தாகியகருடன் கடைப்புறங்காத திருக்கவும் சேனைமுதலியானவர் ஏவற்றொழில்கேட்டு நிற்கவுந்தேன்பொருந்தியதுளவமாலையணிந்தருளிய திருமார்பிலே இளஞாயிறுதித்த போலகிரணங்களையுமிழ்ந்து கவுஸ்துவாபரணமணியானது விளங்கவும்யாவராலும்வெல்

ஒதற்கரிய அசுராதியரைக்கடிந்து வென்ற சங்கு சக்கரந் தண்டுவாள்கோதண்டமாகிய பஞ்சாயுதங்கள் இருபக்கமும்நின்று விளங்கவுங் கருமைபெற்றவொருபெரியமலையானது கமலவனமாகப்பூத்துக்கிடந்ததுபோல அடிதுடங்கிப்பாயிரமாக நான்குவேதமும் மும்முறையாகப்பாவிப்போற்றிசெய்யத் திருப்பாற்கடலிலேபெருமைமிக்க மாணிக்கமணிகளைப் பணாமுடியிடத்துண்டாகிய ஆயிரம்வாயையுமுடையராவணையின் மேலே யோகநித்திரையிலினிதாகவமர்ந்தவனே அப்படியமர்ந்ததுமன்றி மண்ணுலகத்திலுள்ளதுன்பமெல்லாமகலவும் விண்ணுலக முழுதுந் தொழுது தோத்திரஞ்சொல்லவும் இடம்விசாலமாயகண்ட காவேரித்தீர்த்தத்திலேவெண்மணற்குன்றினிடத்திலெருங்கி ரணங்களையுடைய ஆகாயத்திலே வரப்பட்டசூரியன்றேரிற்கட்டியபச்சைக்குதிரைகள் உயர்ச்சியினாலே வழிவிலங்கிப்பக்கத்தேபோகாநின்றசெம்பொன்னினாற் செய்தசத்தப்பிரகாரஞ்சூழ்ந்த திருவரங்கமாகிய பெருமைமிக்ககோயிலினிடத்திலே ஆணிப்பொற்றகட்டினால்மேய்ந்து நவமணிகளிழைத்தகபாடமும் நீண்ட திருவாயற்படிக்குள்ளாய் மாணிக்கமணிகளின்சோதியாகிய வெயிலெரிக்கும் வச்சிரமணியாலமைத்தபிரணவாகாரமான விமானத்தின்மேல் மின்னற்கொடிபோலொளிவிளங்கிய கொடிமுதலாகியவாகுவலையமணிந்த அழகின்மிக்க வலதுதிருக்கையைத் திருமுடிக்கீழேகொடுங்கை யணையாகக்கொடுத்து தெற்கினகணுண்டாகிய இலங்கைத்திசையைநோக்கித் திருக்கண்வளர்ந்தருளியசுவாமி அடியேன்சொல்லும் விண்ணப்பங்கேட்டருள்வாயாக வேண்டியதென்றவாறு

இவை ஈரடித் தாழிசைகள்(௬)

தேவராய்தேவர்க்குந் தெரியாதவொளியுருவாய்
மூவராய்மூவர்க்கும் முதல்வனால்நின்றேபநீ

போற்றுவார்போற்றுவதுன் புகழ்ப்பொருளேயாதலினால்
வேற்றுவாசகமடியேன் விளம்புமாறறியேனால் ௨

பணித்தடங்காதியைபவர்க்கும் பங்கயத்தோன்முதலோர்க்கும்
பணித்தடங்காபுகழடியேன்பணித்தடங்கற்பாலதோ ௩

யாங்கடவுளென்றிருக்கு மெவ்வுலகிற்கடவுளர்க்கும்
ஆங்கடவுணீயென்றாலதுனக்குவியப்பாமோ ௪

அனைத்துலகுமனைத்துயிரு மமைத்தளித்துத்துடைப்பதுநீ
நினைத்தவிளையாட்டென்று னின்பெருமைக்களவாமோ ௫

கருதரியவுயிர்க்குயிராமக் காரெங்கும்பரந்துறையு
ஒருதனிநாயகமென்று னுன்புகழ்க்குவரம்பாமோ ௬

(எ-து) தேவர்களாய்த்தோன்றி அப்படியேதோன்றியதேவர்களுக்குங்காணப்படாத ஜோதிவடிவமாயிருந்தருளிய பிர்மாவிஷ்ணு ருத்திரனென்று மும்மூர்த்திவடிவமாயததோன்றி அப்படிதோன்றியமூவர்க்குமூதல்வனுகிய மூலகாரணபகின்றவனும்நீயே உன்னைத்தோத்திரஞ்செய்யப்பட்டவர்கள் தோத்திரஞ்செயவ துன்னுடைய புகழ்சேர்ந்த பொருளன்றி மற்றொன்றில்லாமைபகல் வேறொருவசனமா யடியேனெடுத்துச் சொல்லவழியறிந்திலேன் பெருமைபெறசெவியினாலே குண்டலமாகப் பாம்பைபணிந்தயீசுரனுக்கும்நாபிக்கமலத்திற்பிறந்த பிர்மாமுதலான பேர்களுக்குஞ் சொல்லிமுடியாதயுன்கீர்த்தியை அடியேறசொல்லி முடிக்கப்படுவதோயாங்களே செயவமென்று இறுமாந்திருக்குமெந்தெந்தவுலகத்திலுள்ள தெய்வங்களுக்குந்தெய்வமாகிய கடவுள்நீயேயென்றுசொல்லுவேனுகி லதுகொண்டு தான்உன்பெருமைக்கு அளவுசொல்லக்கூடுமோ நினைவினால்நினைத்துநிதானித்ததற்கரிய சகலசீவராசிகளுக்குஞ் சருவேந்தியுயாமியுமாய் ஒளித்துச் சூக்குமவடிவாயெங்கெங்கும் நிறைந்திருக்கும் ஒப்பதுமிக்கது மில்லாத வொருதனிநாயகமென்று சொல்லிப்புகழ்வவனுகிலுமுனது புகழாகியபெருங்கடலிக்கு அதுவொரு அணையாகுமோவென்றவாறு ௨

இவை ஈரடி-அராகங்கள்-௪-

உருவெனவருவென வுளனெனவிலனென
அருமறையிறுதியு மறிவருநிலைமையை ௧

இவரிவரிறையவ ரெனமனவுறுதியோ
டவகவர்தொழவறுசமயமு மருளினை ௨

கடுவளிகனல்புல் ககனமோடகலிடம்
உடுபதிகதிரவ னுருவமுமருளினை ௩

கடிமலரடியிணை கருகினர்பெருமென
அடிநடுமுடிவற வருள்பரகதியினை ௪

(எ-து) உருவமென்றும் - அருவமென்றும் - உள்ளவனென்றும் இல்லவனென்றும் ஒன்றேயொன்றெவ்வாமற் றடுமாறிச் சொல்வதேயல்லாமல் இதிலொன்றை மெய்யென்று திடப்படுத்தி வேதமுடிவிலேயு மறியப்படாத நிலைமையை யுடையவனுமாறுய் அது

வுமன்றியாங்கள்வழிபடுங்கடவுளர் இவர்காணிவர்காணென்றுதிடப்படுத்தி
வேதமுடிவிலேயும்அறியப்படாதநிலைமையையுடையனுமானாய் அதுவும
ன்றிசித்தத்துடனே அவரவர்தொழும்படிக்கீடாய்ஆறுசமைய பேதங்களை
யும்உண்டாக்கினவனுமானாய் அதுவுமன்றிநெடியதாகிய சற்றுநெருப்புத
ண்ணீர்ஆகாயபூமி சந்திரன்சூரியனென்றுஞ்சொல்லத்தக்கவடிவங்களை வ
குத்தவனுமானாய் அதுவுமன்றிப்பரிமளமலரையொத்த உனதுஇரண்டுதி
ருவடியையுஞ்சிந்தித்தவர்பெறக்கடவதென்று ஆதிமத்தியாந்தமென்பதில்
லாமையாகஅளிக்கப்பட்டவதிரகசியமான பரகதியைப்பொருந்தினவனு
மாகயிருந்தார்யாரில் உன்னையாவராலரிந்துதுதிக்கப்படுமென்றவாறு (௬)

இவைபெயர்த்தும்-ஈரடித்தாழிசைகள்(௪)

ஒருநாலுமுகத்தவனோடுலகீன்றுயென்பரதுந்
திருநாபிமலர்ந்ததல்லாற்றிருவுளத்திலுணராயால் (க)

மேருகிரியுடல்வுணன்மிடல்கொடுத்தாயென்பரதன்
கூறுகிரேயறிந்ததல்லாற்கோவேநீயறியாயால் (உ)

பன்றியாய்ப்படியெடுக்கபாழியர்யென்பாது
வென்றியாருனகெயிற்றின்மென்றுகாள்போன்றிருந்ததால் (௩)

அண்டமெலாமுண்டையென்பரறியாதாராங்கவை
உண்டருளுங்காலறதிலொருஅற்றுக்காற்றுவால் (௪)

(எ-று)ஒப்பற்றசதுமுகனாகிய பிரம்மதேவனையும உலகங்களையும் நீ
பெற்றாயென்றுசொல்லுவார்கள அப்படிச்சொல்லப்படுவதுஉனது அழகி
யநாபிக்கமலமேபெற்றதன்றியுனதுதிருவுள்ளத்திலேநீயறியாயேமகமேரு
கிரியையொத்ததிரேகத்தையுடையவிரணியாசூரனுடையபராக்கிர த்தை
அடக்கினாயென்றுசொல்லுவார்கள் அப்படிச்சொல்லப்படுவதுவுனதுகூ
றியநகமேயறிந்ததன்றி சுவாமிநீயறியாயே சுவேதவராகவவதாரமாய் பூமி
யைச்சுமந்துவலிமையையுடையவனென்றுசொல்லுவார்கள் அப்படி சொ
ல்லப்படுவது வெற்றியையுடையஉனது கொம்பிலேயொட்டிநின்று வொ
ருசிறியமணற்பொடியைப்போலிருந்ததன்றிமற்றொரு பாரமாகக் கா
ணப்பெற்றதல்லவே அண்டங்களெல்லாம்நீயுண்டுவிட்டதென்றுசொல்லு
வார்கள் அந்தஅண்டங்களையெல்லாம் நீயுண்ணத்தொடங்குமளவில் அதுவு
னக்குவொருகவளத்துக்குங்காணுமோ காணமாட்டாதென்றவாறு (௪)

இவைநாற்சீர் - ஓரடி - அம்போதரங்கம் (௨)

நஞ்சமுமமுதமுநரகும்வீடுமாய்
வஞ்சமுஞானமுமறப்புமாயினை
இருவினைப்பகுதியுமின்பதுன்பமும்
கருணையும்வெகுளியுங்கருத்துமாயினை

(எ-து) கொல்விக்கநஞ்சமும்-பிழைப்பிக்கவமுதமும்-வேதனைப்படுத்தநரகமும்பரமானந்தத்தையுடையமோட்சமுமாயினதன்றி - வஞ்சிக்கவஞ்சமும்-அறிவிக்கஅறிவும்-பிறப்பிக்கபிறப்புமாயினாய் அதுவுமன்றி இருவினைப்பகுதியாகியபிறப்பிறப்பும் புண்ணியபாவமுஞ்சுகதுக்கமு மாயவனவன்எதுமுன்னிலையாயிரங்கவிரக்கமுங் கோபிக்ககோபமுங் குறிக்கக் குறிப்புமானாய் ஆகையாற்சகலமும்உன்னைவிட்டகன்றதில்லை அதைவிட்டுநீ யகன்றதுமில்லையென்றவாறு (௬)

இவைமுச்சீர்ஓரடிஅம்போதரங்கம் (௪)

அலைகடல்வயிறுகலக்கினை-யவுணர்மதுகையடக்கினை
மலைகடகளிறுவதைத்தனை-மலைதலைகவிழவெடுத்தனை

இவை-இருசீர்-ஓரடிஅம்போதரங்கம் (௮)

மண்ணைவிண்டனை-வெண்ணெயுண்டனை
மருதிடந்தனை எருதடர்ந்தனை
உண்ணிறைந்தனை-எண்ணிறந்தனை
ஒருமையாயினை-பெருமையேயினை

(எ-து) அலைகளையுடைத்தாய்யாவராலுங்கலங்காத சமுத்திரத்தினுடையவயிறுகலங்க வசையற்றமகமேருவாற்கலக்கவுங்கலக்கினாய் அதுவுமன்றிச்சுரர்களுக்கிடுக்கண்செய்கையால்அசுராதியர்களுடைய ஆண்மையையடக்கவுமடக்கினாய் அதுவுமன்றிக்காதகனாகியகஞ்சனால்வந்துமலைக்கப்பட்டகுவலயாபீடமென்னுமதயானையினுயிர்மாண்டு விழவதைக்கவும் வதைத்தாய் அதுவுமன்றி இந்திரனாற்பெய்யப்பட்டமழையைதடுத்துப் பசுக்குலங்களையும்ஆயர்கூட்டங்களையுங்காக்கவேண்டி கோவர்த்தனகிரியின் கொடிமுடியாகியதுதலைகீழாய்மேலேயதன்விரிவுகுடையாயிருக்கஎடுக்கவுமெடுத்தாய்அதுவுமன்றியும்பன்றியாகவடிவமெடுத்துமுககொம்பினாலேகுத்திமண்டலமுழுதும்பிளக்கவும்பிளந்தாய்அதுவுமன்றிஆயர்பாடியில்அன்னை

யாகிய அசோதைதயிர்கடையும்போது தான் மனையிற்காயும்பால்பொங்கிற்றென்றுநீயுண்ணுமுலையைவலிதிற்பறித்துவோடுங் கையில்மத்தினும் பாண்டத்தையுடைத்து வெண்ணெயை யனைத்து எடுத் துண்ணவுமுண்டாய் அப்படியுண்டதுவுமன்றிபின்னுங்காவிறுைற்றயிர்ப்பானையை யெல்லாந்தகர்த்துருட்டிக்கண்டாளடிக்கப்போறுளென்றுபயந்து மற்றொருத்திவீட்டிற்புகுந்துவொளித்து அங்குமுண்டானவுரியெட்டாமையால்உரல்வைத்தேறிக்கல்விறைற்குழிசையையுடைத்துவெண்ணெய்நெய்யெடுத்துண்டுகூடவந்ததோழர்களுக்குங்கொடுத்துபூனைக்கும்வழங்குமளவில் வேதமுந்தேடிக்காணுதசிறியதிருவடிச்சுவட்டின்வழியேவந்துகண்டுவாய்மடித்து கெக்கித்தாமபினுலுரலோடேபிணித்துமத்தினுலடிக்கவருகையில் அவ்விடத்தில்முற்காலத்திலேநாரதர்சாபத்தால் நளகூபரன்மணிக்கிரீவனென்றுங்குபேரன்பிள்ளைகளிரண்டும்மருதமரமாய்நிற்கிறசாபந்தீர இரண்டுக்குங்கடுவேதவழ்ந்து அந்தமருதமரத்தைமுறிக்கவுமுறித்தாய் அதுவுமன்றிக்கவுசலதேசாதிபனுனைக்கினசிற்றென்பவன்பெற்றசத்தியையென்னும்பெண்ணைவிவாகஞ்செய்யும்பொருட்டா யார்க்குமடங்காததாய்நின்றயேழெருதுகளுமேழாய்த்திருவுருக்கொண்டுசென்று அவ்வேழெருதின் சவுரிய வலிமையையடக்கித்தள்ளவுந்தள்ளினுய் அதுவுமன்றியென்னுக்கு வெண்ணெய்போலெங்கும்நிறையவும்நிறைந்தாய் அதுவுமன்றியிவ்வளவென்றோரிலக்கத்துக்கெட்டாமல்நிற்கவும்நின்ருய் அதுவுமன்றி யொன்ருகவுமானுய் பல்லாகவுமானுய் ஆகையாலுனது திருவிளையாட்டின்செயலையானென்சொல்லுவேனென்றவாறு

எனவாங்கு-இது-தனிச்சொல்

இது - பதினான்கடிநிலமண்டில - ஆசிரியசுரிதகம்.

மலர்தலையுலகத்துப்புலமைசான்ற
பதின்மரும்பணித்தபாடலோனதயொடு
மூதுமறைகரங்கமுரசமார்ப்ப
வலம்புரிபிளிறும்புலம்புரிகோயில்
ஆழியஞ்செல்வவாழியம்பரம
வாழிவாழிமாயோய்வாழி
நெடியோய்வாழிநின்மாட்டொன்றே
அடியேன்வேண்டுவதஃதுநீமறுக்கேல்

பூவருமயன்முதல்யாவருமறியா
மூவுலகளந்தநின்சேவடிவாழ்த்தித்
தொழுந்தகைத்தொண்டர்தந்தொண்டருட்சேர்க்கா
தெழுவகைத்தோற்றத்தினுட்பிறப்பின்
என்பொழியாக்கையுட்சேர்ப்பினுமவர்பால்
அன்பொழியாமையாருண்மதியெனக்கே

(எ-து)விரிவாகியவிடமுள்ளபூலோகத்திலேபுலமையிருந்த பதின்மரா
கிய ஆழ்வாராதியர்சொல்லியருளியநாலாயிரப்பிரபந்தமாகியபாட்டினது
வோசையுடனேகூடப்பழமையாகியசதுர்வேதங்களுஞ்சத்திக்கவும் வெற்
றிமுரசமுழங்கவும்வலம்புரிச்சங்கந்தொனிக்கவும் பொன்னாற் சமைத்தரு
ளியதிருவரங்கமாகியகோயிலினிடத்தில் அழகிய சங்காழியைத்தரித்தசெ
ல்வனே ஆதிமூலமா யழகியபரமனேநீவாழ்வாயாகநீகண்டுவளராநின்றவ
னேநீவாழ்வாயாகஉனதிடத்தில்அடியேன்விண்ணபஞ் செய்யவேண்டு
வதொன்றுண்டு அதனையில்லையென்றுமறுத்துவிடாமலீதல்வேண்டும்அது
கியாதெனிற்றாமரைப்பூவி லுற்பவித்தபிரமதேவன்முதற்கொண்டு யாவ
ரொருவராலுமளவுகாணப்படாதபூமியந்தரசுவர்க்கமென்னு மூவுலகையு
மளந்தவுனது திருவடித்தாமரையைவாழ்த்திவணங்குகின்ற தகைமைப்பா
ட்டினையுடையதொண்டர்க்குத் தொண்டாளவர்களுக் குள்ளே அடியே
னையுமொருவனாகச்சேர்க்கவேண்டியது அடியேன்பக்குவனல்லாமையால்
அப்படிசேர்க்கத்திருவுளத்துக்குப்பரங்கின்றிச் சேர்த்திடாமல் நான்குவ
கைப்பட்டஅண்டசம்சுவேதம்உற்பீசம்சராயுசமென்னும்பிறப்பி லெழுவ
கைத்தோற்றமாகியதாபரங்கள்பத்தொன்பதுலட்சமும்ஊர்வன பதினோந்
துலட்சமும்,தேவர்கள்பதினொருலட்சமும்,நீருறைவனபத்துலட்சமும்,ப
றவைகள்பத்துலட்சமும்-நாற்காலின்பத்துலட்சமும்-மானிடர்ஒன்பதுலட்
சமும்ஆகக்கூடின எண்பத்துநான்குலட்சசீவராசியின் பேதாபேதங்க
ளில்மிகவும்அற்பமாயென்பொழியாக்கையாகியபுழுவாகப் பிறப்பித்தாலு
ம்உனதுபாதாரவிந்ததிருவடிகளினிடத்துண்டாகிய அன்புவொருக்காலும
றந்துபோகாமையாகியமதியையடியேனுக்கு அளித்தருளவேண்டும்-எ-று

நேரிசைவெண்பா

எனக்கேதிருவரங்கனேபிரானெம்மான்
தனக்கேயடிமைதமியேன்புளக்கேழ்

மருத்துளவோன்மேலன்றிமற்றொருவர்மேலென்
கருத்துளவோவாராயுங்கால்

(எ-து) ஆராய்ந்துபார்க்குமளவில் எனக்குத் திருவரங்கத்திலெம்பெருமானென்னும்பெயரினையுடையவனாகியுமெமக்குச்சுவாமியாகியும்புனத்திற்றட்சுவைமிக்கநிறமுஞ்சுகந்தமுமுள்ள துளவமாலையணிந்தவனாகியு மிருக்கிறஅவன்றனக்கேதமியேனாகிய யென்வசத்து அடிமையானது அவனையன்றிமற்றொருவராகிய தெய்வங்களைப்பரமென்றடைந்து அவர்கள்மேதென்கருத்துகாட்டத்தக்கதுண்டாகுமோவாகாதென்றவாறு. (௨)

கட்டளைக்கலித்துறை

காலாயிரமுடியாயிரமாயிரங்கைபரப்பி
மேலாயிரந்தலைநாகங்கவிப்பவிண்பூத்தசஞ்சம்
போலாயிரங்கண்வளரும்பிரான்பொன்னரங்கமென்றே
மாலாயிரங்கவல்லார்க்கெய்தலாந்திருவைகுந்தமே

(எ-து) ஆயிரங்கால்களும் ஆயிரமுடிகளும் ஆயிரங்கைகளுமுடையவனாய் அந்தக்கைகளையெல்லாம்பரப்பிக்கொண்டு உகாந்தப்பிரளைய வெள்ளத்தின்மேலே அநந்தனாகியநாகம்ஆயிரம்பணாமுடிகளைக் கவிக்க ஆகாசத்திலே பூத்தஅம்போருகபுட்பம்போலாகிஆயிரங் கண்மலர்களைமுகிழ்த்துககொண்டுதுயின்றருளியபிரானாகியவெம்பெருமானெழுந்தருளி யிருக்காநின்றதிருவரங்கமாகியதலமென்று ஆசையுற்றிரங்கிமனோவாக்கு காயங்களினால் மதிக்கவுந்துதிக்கவும் வணங்கவும்வல்லவர்களுக்குப்பிரபஞ்சமாலையினது தடையின்றி அழகியவைகுந்தத்திற்சேர்ந்திருந்து வாழ்கக்கிடைக்கு—எ-று

அறுசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்

வைகலந்தழையிலைவேலிசற்கும்வாசவற்கும்
வாசப்பூமேன்
மெய்கலந்தநால்வேதவிரிஞ்சனுக்குமேலாவீற்
றிருப்பர்மாதோ
பைகலந்தபாம்பணைமேற்றிருவரங்கப்பெருநகருட்
பள்ளிகொள்ளுங்
கைகலந்தநேமியான்றிருநாமத்தொருநாமங்
கற்றார்தாமே

(எ-து) படத்தினையுடையபாம்பாகியஅணையின்மேலே திருவரங்கமாகியபெரியநகரத்தில்திருக்கண் வளர்ந்தருளிய கையில்தரித்தசக்கராயுதனுடையஆயிரந்திருநாமத்திலேயொருதிருநாமமாகிலுங்கற்றபேர்கள்கூர்மையுடைய சூலாயுதமேந்தியயீசுரனுக்குந் தேவேந்திரனுக்கும்வாசப்பூவானநறுமலர் நாற்றமிகுந்த தாமரையிலிருக்கும் சதுர்வேதத்துக்குரியபிரமதேவனுக்குமேலாகியபதவியில்வீற்றிருப்பார்களென்றவாறு (௬)

எண்சீரடியாசிரியவிருத்தம்.

கற்றாரெனினும் பதினாலுலகுங்
கண்டாரெனினுந் தண்டாமிருபற்
றற்றாரெனினுந்திருமாலடியா
ரல்லாதவர்வீடில்லாதவரே
பொற்றாமரையாள்கணவன்றுயிலும்
பொற்கோயிலையோபுகழ்வார்பணிவார்
மற்றாரெனினும்பெற்றாரவரோ
வானோர்திருமாமணிமண்டபமே

(எ-து) சகலவேதபுராணசாஸ்திரமுதலானவைகளையெல்லாங் கற்றார்களேயாயினும் மேலேழுலோகங் கீழேழுலோகமானபதினாலுலகங்களையெல்லாங்கண்டார்களேயாயினுந்தவிர்த்தற்குரியதாயமிகுந்த ஆசாபாசங்களையறுத்தவரோயாயினுந்திருமாலுக்கடியரல்லாதவர்களாயினராகில் அவர்கள்வீடுபேறில்லாதவர்களாய்மெலிவாரகள் பொற்றாமரையாளாகியஇலக்குமிநாதன்றுயிலாநின்றகோயிலாகியதிருவரங்கத்தைபக்கையாய்ப்புகழவும்பணியவுந்துடங்கினவர்கள்மேன்மக்களன்றிதீமக்களாயினும் அவர்கள்வந்து பெற்றனரன்றோவைகுந்தத்திலேவானவர்களுந் தொழத்தக்க மாட்சிமையுடையமணிமண்டபமாகிய முத்திமண்டபமென்றவாறு (௭)

எழுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

மண்டலமும்விண்டலமுநின்றவடகுன்றமும்
வளைந்தமலையுங்கடலுமு
நண்டமுமகண்டமுமயின்றவர்துயின்றருள்
அரும்பதிவிரும்பிவினவில்

கொண்டல்குமுறுங்குடமெழிந்துமதகுந்தியகில்
 கொண்டுநுரைமண்டிவருநீர்
தெண்டிரைதொறுந்தரளமுங்கனகமுஞ்சிதறு
 தென்றிருவரங்கநகரே

(எ-து) மண்ணுலகையும் விண்ணுலகையும் நிலைநிற்கின்ற மகமேரு கிரியையும் அதைச்சூழ்ந்தமற்றமலைகளையுஞ் சமுத்திரத்தையும் பழமையாகிய அண்டத்தையும்நவகண்டமல்லாத அகண்டத்தையும் அமுதுசெய்தருளிய அருளாளர்திருக்கண்வளரத் தக்கதாய் அரிதாகியபதியைஆசையுடனேயாதென்றுவிரும்பிக்கேட்கில் மேகங்கள்படிந்து முழங்கப்பட்டமேலைத்திசையிலிருந்திறங்கி மதகினைமுட்டித்தள்ளி அகிற்கட்டைகளையுருட்டிக்கொண்டுநுரைத்துவரப்பட்டநீரிலேதெளிந்தஅலைகளைமோதுந்தோறுமோதுந்தோறும்முத்தும்பொன்னுஞ்சிதறப்பட்டகாவேரிநதிதீரத்தலமு இனமிருந்ததிருவரங்கமாகியநகரமென்றவாறு (௯)

புயவகுப்பு-ஆசிரியவண்ணவிருத்தம்-இதுமுதலடி.

நகுகதிர்வழங்குதகடுபடுசெம்பொன்நவமணிதுயின்றதொடியணியணிந்து
 ககணவிலிடுநீலவெற்றிருந்தன
நரியபுதுமன்றறிசைமுழுதுமண்டநரவுகுதிகொண்டதுள வணியலங்கன்
 மதுகரமொருகோடிசுற்றப்புனைந்தன
நளினமடங்கைகுவலயமடந்தை சனகனதனங்குபொதுவர்மக ளென்றிவ்
 வனிதையர்தனபாரமொத்தகுழைந்தன
நதிபதிகுழன்று கதறிநுரைசிந்தவரவடுரிஞ்சி யலறவலமந்து - வடவரை
 யுடறேயநட்டுக்கடைந்தன

இதுஇரண்டாமடி.

இகலியிருகுன்றிலிருசுடரெழுந்து பொருவதெனவிம்ப மதிமுகமிலங்கும்
 இருகுழையிருபாடலைப்பச்சிறந்தன
இணையறவிமிர்ந்து வலியொடுகிரண்டு புகழொடுபரந்து புழுகொடுமணங்
 கு-கலவையினணிசேறுதுற்றுக்கமழ்ந்தன
எதிரொருவரின்றியகிலவுலகுந்தன் அடிதொழவிருந்த விரணியனடங்க
 முரணியவனாமார்பமெற்றிப்பிளந்தன
எறிகடல் கலங்கிமுறையிட வெகுண்டு நிசிசரலிலங்கையா சொடுமலங்க
 வொருசிலையிருகால்வளைத்துச்செவந்தன

இதுமூன்றாமடி

மிகுகளவினின்றவிளவுகனிசிந்திமடியவிடுகன்று குணிலெனவெறிந்து-ட
றவையினகல்வாய்கிழித்துப்பகிர்ந்தன
வெறிபடுகுருந்தைமுறிபடவளர்ந்து குடங்கடமகிழ்ந்துகுரவைகள் பிணை
ந்து-பொருதொழிலெருதேழுசெற்றுத்தணிந்தன
வெடிபடமுழங்கியெழுமுகிலுமண்டரொடுநிரை தியங்கவெறிவதிவலைகண்
டு-தடவரைகுடையாவெடுத்துச்சுமந்தன
விழிவடவைபொங்கவெதிர்பொரநடந்தகளிறுளம்வெருண்டு பிளிறிட-மு
னிந்து-புகர்முகவிருகோடுபற்றிப்பிடுங்கின.

இது-நான்காமடி.

அகலிடமுழுதும்பருலகமுநடுங்கி அபயமடியெங்களபயமெனவந்து-விழு
தாறுமிடையூறகற்றிப்புரந்தன
அருகுறவிளங்கு மொருகிகிரிசங்கம்வெயிலொருமருங்கு நிலவொருமருங்
குமெ-எதிரெதிர்கதிர்விசவிட்டுப்பொலிந்தன
அருமறைதுணிந்த பொருண்முடிவையின்சொல் அமுதொழுகுகின்ற த
மிழினில்விளம்பி-யருளியசடகோபர் சொற்பெற்றுயர்ந்தன
அரவணைவிரும்பியறிதுயிலமர்ந்த அணிதிருவரங்கர்மணிதிகழ் முகுந்தா
அழகியமணவாளர்கொற்றபுயங்களே

(எ-று) ஒளிரப்பட்டவெள்ளிகளை யுத்தவத்தக்க செம்பொற் றகட்டினாலும்நவரத்தினங்களினாலுஞ்செய்த கொடிமுதலாகியபூஷணங்களையணிந்து வானவில்லிட்டுவிளங்கப்பட்ட நீலமலையையொத்திருந்ததுவும் நவ்விதாகியபதுமணம்எட்டுதிசைகளையும்வளைக்கத்தேன்குதிகொண்ட அழகியதுளவமாலையைவண்டினங்களானதுவொருகோடிக்குமேலும்வந்துசுற்றிக்கொள்ளத்தக்கதாகச் சூட்டினதுவும் தாமரைப்பூவில் மடமைமுதலிய குணத்தால்மிக்கமங்கையாகியதிருமகள்நிலமகள் சனகராசாவின்மகள் இடையர்மகளீர்களென்றுசொல்லப்பட்ட விப்பெண்கள்மாருடனேகணத்த கொங்கைகளானதுவொத்தும்படியாற்குழைந்ததுவும்சமுத்திரமானதுசுழன்று கதறி நுரைகளைச்சிந்த ஆதிசேஷனாகிய அரவதனின்வயிரைப் பட்டுமறுக்கமுற்றலற கலியா நிலைமை யுடைத்தாய் பதினாறாம யோசனை தூரமேல்நோக்கியதாய்ப் பதினாறாயிரம் யோசனை தூரஞ் சுற்றளவுடையதாய் மேல்விரிவு முப்பத் தீராயிரம் யோசனை தூரமுடைத்தாய்ப் பதினாலுலகத்துக்கு மாதாரமான மகமேருகிரியி னுட

லந்தேய்ந்துபோகமுக்கடைந்தவும்மாறுபாட்டிரண்டு மலையினிடத்திலிரு
சுடரொன்றுஞ்சந்திராதித்தருதித்துஒருவருக்கொருவர்பொருவதுபோலக்
லைநிரம்பியமதியினதுவிம்பம்போன்றதிருமுகத்திலேவிளங்குகின்ற யிரு
குழைகளிருபக்கமும் அசையும்படிக்குச்சிறப்பித்திருந்ததுவும் தனக்கிணை
யொன்றுமின்றிநிமிர்தலையுற்றுதின்மையுடனே கூடித்திரண்டுபுகழாடும்
பொருந்திவிசாலமாய் நறும்புழுகினுடனேதேய்ந்துநால்வகைச் சாந்தாகி
யகலவையினாலணியத்தக்கதாயிருந்ததுவும்இரணியனுடைய சவுரியமடங்
கழரணியவென்னுந்திண்ணியமலையையொத்த மார்பினைக்கண்டித்துப்பி
ளந்ததுவும்அலைகளெறியுங்கடலாகியது கலங்கிஅபயமென்று முறை
யிடக்கோபித்து இராக்கதர்க்கிடமாகிய யிலங்கையைஇராவணனுடனே
நுங்கிமயங்கவொப்பற்றகோதண்டத்தினுடையவிரணக்கொடியும்வளையச்
செய்துசிந்ததுவும்கஞ்சனால்விடுபட்டு காட்டகத்தில்வந்தவற்சராசுரனை
வன்மடிய அவன்மிருந்தகவடமாயுருவெடுத்துநின்றகுழைக்கன்றைதானே
குறுந்தடியாகப்பிடித்துச் சுழற்றியக்கனநின்றவிளாவின்கனிசிந்த விட்டெ
றிந்ததுவுமன்றிஅர்த்தராத்திரியிலாயர்பாடியிலேஆயரோடுங் கூடியொரு
தாமரைத்தடாகத்தில்வரும்போது அங்குமொரு அசுரன்குருக்காகியபுள்
ளாய்விழுங்குதலும் அப்புள்ளினதான்றவாயைக்கிழித்துப் பகிர்ச்சியாகப்
பகிர்ந்ததுவும்மணங்கமழுங்குருந்தமரமானதுமுறிபடும்படியாய்நெருங்கி
க்கையைக்கொட்டிக்குவிகதுங் குடமென்னுங்கூத்தை மகிழ்ந்தாடியதுவும்
அதுவுமன்றிக்கைகளைக்கொத்தாடலாகியகுரவைபாடலைப்பிணைத்தாடிமற்
பொருதொழில்எல்லவரை இத்தனையுஞ்செயித்துச்சினந்தணிந்ததுவும் அ
ண்டமுகடும்வெடிக்கமுழங்கியாயர்கூட்டமுந்திகைக்கச்சத்தமேகமுங் கூ
டிக்கொண்டுகற்களைவிட்டெறிவதுபோலச்சொரியுமழையைக்கண்டுவிலங்
கவிசாலமானகோவர்த்தனகிரியைக்குடையாயெடுத்துச்சுமந்ததுவுங் கண்
ணிலேவடவாக்கினிப்போலபொறிபறக்கவெதிர்த்துப் பொருதவந்தயானை
மனந்திடுகிடப்பயந்துவீரிட்டலறமுனிந்துபுகராகியபுள்ளிபாய்ந்தமுகத்
தையுடைய அந்தமத்தகெஜத்தின்கொம்புஇரண்டையும்பற்றிப் பிடுங்கின
துவும்மண்ணுலகமும்விண்ணுலகமுந்நடுங்கியபடைய மடைபமடியோர்

கனென்றடைந்து திருவடியிற்றெண்டனாகவிழுந்தோரும் அவர்களுக்குற்ற விடுங்கண்டவிர்த்துக் காத்ததுவுமிரண்டருகிலுமூன்று விளங்குங் கீர்த்தியோர்மேலெறிகின்றசக்கரமுஞ்சங்குமொருபக்கத்திற்சூரியனது வெயிலுமொருபக்கத்திற் சந்திரனது நிலவுமொன்றுக்கொன்றெதிர்த்து ஒன்றின் மேலொன்றுகிரணங்களைவிட்டெறிக்கச்சிறப்பித்ததுவும் அரிதாகியவேதத்திற்றுணிந்துசொல்லிய வேதாந்தப்பொருளை இனிய சொல்லாகிய வமுதமொழுகப்பட்டதமிழினாலோதியருளியசடகோபாழ்வாருடைய சொல்லாகியபாமாலையைச்சூட்டப்பெற்றுயர்ந்ததுவும்யாதென்னிற் பாம்பாகியவணையைவிரும்பியதன்மேல்யோகநித்திரையாயமர்ந்தருளிய திருவரங்கேசர்நீலமாணிக்கம்போலவிளங்கியமுகுந்தர் அழகியமணவாளரானவருடைய வெற்றியைப்பொருந்தியதோள்களென்றவாறு. (எ)

நேரிசைவெண்பா

புயனான்குடையானைப் பொன்னரங்கத்தானை
அயனாந்திருவுந்தியானை-வியனும்
பரகதிக்குக்காதலாய்பாடினேன்கண்டீர்
நரகதிக்குக்காணுமனான்

(எ-து)சதுர்ப்புயங்களையுடையவனைத்திருவரங்கமாகிய தலச்சரத்தை யுடையவனைப்பிரமதேவனைப்பெற்றவுந்திகமலதனையுடையவனை அடியேனாசையாயெதுவேண்டிப்பாடினே னென்பீராகில்நகரத்தை யுடையமொமலோகத்தைநாடாமல்பலனதிகமாகியகதியையுடைய பரலோகமேயடையவேண்டுமென்னும்பிரிவினாலேபாடினேகண்டீரோவென்றவாறு (அ)

கட்டளைக்கலித்துறை

ஞானந்தவைகுந்தநாடொய்திவாழிலென்ஞாலத்தன்றி
யீனந்தவரதிநிரயத்துவீழிலென்யானடைந்தேன்
கோனந்தன்மைந்தனைநான்முகன்றந்தையைக்கோயிலச்சு
தானந்தனையெனக்காராவமுதையரங்கனையே

(ஞ-து)நானிந்தஞாலமாகியபூமியின்கண்ணெல்லாம்அந்தவைகுந்தமாகியநாட்டினிடத்திலுஞ்சென்றுவாழமாட்டேன்ஈனமாகியவீடானதநகரத்தினிடத்திலுஞ்சென்றுவீழமாட்டேன்எனக்கொருபற்றுக்கோடாகவொருவனைப்பரமென்றடைந்துவிட்டேன் அவனாரோவென்னில்ஆயர்குலாதிபனானந்தகோபாலனுக்கு நந்தனனவன்நான்முகனானவிதர்வுக்குப் பிதாவா

ணவன்கோயிலாகிய வரங்கத்திலச்சுதானந்தனானவன் அதுவுமன்றி உண்ணுந்தோறு முண்ணுந்தோறுமெங்களுக்குத்தெவிட்டாதவமுதத்தையொத்த அரங்கநாயகனையே அடைந்தேமென்றவாறு. ௯)

எண்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

அரவினடித்தானுமுரவிலொடித்தானும்
அடவிகடந்தானும் புடவியிடந்தானும்
குரவைபிணைத்தானும்பரவையணைத்தானும்
கோசலைபெற்றானும்வீசலையுற்றானும்
முரனையறுத்தானுங்கானையொறுத்தானும்
முத்தியளித்தானும்பயதியளித்தானும்
பரமபதத்தானுஞ்சாமவித்தானும்
பாயல்வடத்தானுங்கோயிலிடத்தானே

(எ-று) அரவமாகியகாளிங்கன்முடிமேல்நின்று நடித்தவனும்உரமுடையவுமாபதிவில்லையொடித்தவனும்அடவியாகியவாரணியத்தில் மாதாபிதாவாக்கியப்படிக்கடந்தவனுடம்புடவியாகியபூமியை யேனமா யெடுத்தவனும்குரவையாகியகூத்துக்குக்கையைக்கோர்வையாகப் பிணைத்தவனும்பரவையாகியவுலரியைப்பருப்பதங்களாற்றிருவணைசெய்தவனுங் கோசலையானதசரதன்றேவிபிள்ளையாகப்பெற்றவனும்வீசப்பட்டவலையாகிய சிரசாகரத்திற்கண்டுயிலுற்றவனும்முரனாகியவசுரன்முடியையறுத்தவனும்கரதூஷணன்முதலாகியவரக்கரைவெறுத்துக்கடந்தவனும்தன்னை வினையத்தலைவனையறிந்தசுபோதனருக்குமுத்தியைக்கொடுத்தவனும் குவலயாபீடமென்னும் அத்தியைமதமடக்கினவனும்அன்றியும்அத்தியாகியயானை ஆதிமூலமென்றழைத்தவனுமாம் பாமரகியபதத்தையுடையவனுஞ்சாம்முபாயமாகியசுகருபனும்பாயலாகப்படுக்குமிடமாகவடபத்திரத்தைமகிழ்ந்தவனிமாரோவென்னில் கோயிலாகிய பீடமே குடியாகியவரங்கநாயகனே யாகும் என்றவாறு (௰)

கட்டளைக்கலித்துறை

தானேதனக்கொத்ததாட்டாமரைக்குச்சரண்புகுந்தாள
ஆனேனினியுன்னருளறியேனெனதாருயிரே

தேனேயென் றீவினைக்கோர்மருந்தேபெருந்தேவர்க்கெல்லாங்
கோனேயரங்கத்தரவணைமேற் பள்ளிகொண்டவனே

(எ-து) என்னுடையவுயிர்க்குயிரானவனே அப்படியுயிர்க்குயிராகும் ஒழியாதவின்பத்தையுதவுகாலந்தேனிலுமினிதித்தவனேஎனது தீவினையாகியபிறவிதுன்பந்தீர்ப்பதற்கொரு அருமருந்தவனேபெருமைமிக்க தேவதேவாதிபனே திருவரங்கத்திலேபாம்பணையில்பள்ளிகொண்டவனே தனக்குத்தானேஒப்பாகியஉனது சரணாரவிந்தத்துக்கே சரணடைந்தவடிமையானேன் இனிமேலுனதுதிருவருளிருந்துநடத்தும்படி யின்னதென்றறியேனென்றவாறு (௫௯)

மேகவிடுதூது நேரிசைவெண்பா

கொண்டல்காளும்மைக் குறித்தேதொழுகின்றேன்
அண்டர்காணுவரங்கத் தம்மானைக்-கண்டு
மனத்துளவத்தைப்படுமென் மையலெல்லாஞ்சொல்லி
புனத்துளவத்தைக்கொணர்ந்தீர்போய்

(எ-து)வாருங்கள்மேகங்கள் உங்களைக்குறித்துத்தொழுகின்றேன் எவர்களாலுமளவிட்டுக்காண்பதற்கரிய திருவரங்கத்திலேயெமக்குச்சுவாமியாயிருந்துள்ளவனை நீங்கள்போமளவிற்கண்டுசந்தித்து எனக்கெய்தாமையினாலிருதயத்திலிடர்ப்படலாகியயெனதுமையலாகியவாசையை யறிக்கையைதெரியப்படுத்தி அவரணிந்தபுனத்திற்பச்சென்றபசுந்துழாய் மாலையைகொண்டுவரவேணுமென்றவாறு. (௬௰)

கலிவிருத்தம்.

போயவனிற்சிலம்புறச்சமயநாடும்
பேயறிவைவிட்டெழுபிறப்பையுமறுப்பீர்
ஆயனையனந்தனையனந்தசயனத்தெம்
மாயனையரங்கனைவணங்கிமருவீரோ

(எ-து)வாரீருலகத்தீர்கள் மனதிடமின்றிவையங்கடோறும் லத்திகிரிபோற்சுற்றித்திரிந்து சித்தப்பிராந்தியாய்ப்பலபலசமயங்களைப் பயனின்றியேநாடப்பட்டபேதமையாகியயேயறிவைக்கைவிட்டு யெழுவகைப்பட்டபிறவிபின்வேரைக்களைத்துபிறவாமையாகியவீட்டின்பத்தைமேவுவீர்கள் ஆயனனந்தகோபாலனையனந்தனைவளையனந்தனைசேஷயனத்திற் றிருக்கண்வளர்ந்தருளிய வெம்முடையமாயவனை திருவரங்கத்தையுடையவனை

வணங்கியவருடையதிருவடித்தாமரையேஸ்திரமென்றுசேருவீராகவேணு மென்றவாறு. (யரு)

எண்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்

மருவதந்தையுங்குருவுமெந்தையு
மருள்கெடுப்பதும்மருள்கொடுப்பதும்
உருகுநெஞ்சமும்பெருகுதஞ்சமும்
உரியஞானமும்பெரியவானமும்
திருவரங்கனுரிருவரங்கனுர்
செங்கண்மாயனுரெங்களாயனுர்
அருண்முகுந்தனுர்திருவைகுந்தனுர்
அமலநாதனுர்கமலபாதமே

(எ-து)மருவிவளர்க்கப்பட்டமாதாபிதாவுந்தேசிகனுந் தெய்வமும் மருளைக்கெடுக்கப்பட்டதும்அருளைக்கொடுக்கப்பட்டதும்உருக்கமுள்ள நெஞ்சமும்பெருக்கமுள்ளதஞ்சமாகியபற்றுக்கோடும் உரிதாகியஞானமும்பெரிதாகியவானமென்னும்பரலோகமுமானதுவும் எதுவோவென்னில்உங்கனஞ்சொன்னதொன்றுமல்லதிருவரங்கமாகியகோயிலையுடையவர் இருவரங்கராகியயீசுரனையும்பிர்மாவையுந்தமதங்கத்திலுமுடையவர் செங்கமலம்போன்றதிருநயனத்தையுடையமாயவனுனவர்எங்களுக்கியைந்த வாயனென்னும்நந்தகோபனுனவர்அன்றியும்அருளுருவமான முகுந்தனுனவர் ஸ்ரீவைகுந்தத்தில்வாழப்பட்டவர் அமலனுகியநாதனுன வரங்கநாயகருடைய திருவடித்தாமரையேஅப்படிக்கெல்லாமானதென்றவாறு (யசு)

எண்சீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்.

பாதியாயழுகியகால்கைபரோனும்
பழிதொழிலுமிழிகுலமும்படைத்தாரோனும்
ஆகியாயரவணையாயென்பராகில்
அவரன்றேயாம்வணங்குமடிகளாவார்
சாதியாலொழுக்கத்தான்மிக்கோரோனுஞ்
சதுர்மறையால்வேள்வியாற்றக்கோரோனும்
போதினன்முகன்பணியப்பள்ளிகொள்வான்
பொன்னரங்கம்போற்றுதார்புலையர்தாமே

(எ-து)பண்ணுதபாவங்களைப்பண்ணிப்பாதியா யழுகிப்போன கரசரணுதிகளையுடையரோயாயினும்பழிப்புக்கிடமாகியதொழிலு மிழிவாகியகு

லமுடையவரேயாயினும் அவர்கள்வந்து அன்புடனேவாக்கு மனதுக்குமளவிடப்படாதவாதியானவனே அரவணையிலமர்ந்தருளுமாதிகேசவனே என்றொருதரஞ்சொல்லுவார்களேயாகிலவர்களேகண்டீர் நாங்கள்நமஸ்கரிக்கப்பட்டநாயன்மாரானவர்கள் அதுவன்றிச்சாதினாலு முயர்ந்தவர்களேயானாலும்வேதபாராயணத்திலேயும்வேள்விசெய்வதினாலுமே தக்க தகைமையோராலுந்தாமரையிற்பிறந்த சதுர்முகப்பிர்ம்மாவந்துபணிந்துபூசிக்கப்பாம்பணையிற்பள்ளிகொண்ட பரமபுருஷோத்தமனுடைய பொன்னரங்கத்தைப்போற்றிசெய்யாதொழிவார்களேயாகில் அவர்கள்கடையருக்குங்கடையரேயானபேர்களென்றவாறு

கட்டளைக்கலித்துறை

புலையாம்பிறவிபிறந்தென்செய்தோம்பொன்னிபொன்கொழிக்கும்
அலையார்திருவரங்கத்தெம்பிரானமதன்னையொடும்
தொலையாதகானங்கடந்தவந்நாட்கடந்தோறும்புல்லாய்ச்
சிலையாய்க்கிடந்திலமேநெஞ்சமேகழநீண்டுகைக்கே

(எ-து) பொய்மையாகியகடைப்பட்டசெனனத்தையெடுத்தென்ன பலனையடைந்தோம்ஏழைமனமேபொன்முதலாகிய மணிகளைக்கொழிக்கு மலைகணிரம்பியகன்ற காவேரியினிடத்திலே அழகியவரங்கத்திலுள்ளவனாகியவெம்முடையபிரானானவன்எனதுதாயாகிய சீதாபிராட்டியாருடனே கூடநடந்துகடக்குதற்கரிய காட்டைக்கடந்து சென்றவக்காலத்திலே அவர்கடந்தருளிய அவ்வழிகள்தோறும்புல்லாயாகிலுங் கல்லாயாகிலும் பிறந்துகிடக்கவானாலும்தவஞ்செய்துகொள்ளமாட்டாமற்போனேமே அவரது திருவடிகளையடையும்பொருட்டென்றவாறு (௰௬)

அறுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

தீண்டாவழும்புஞ்செந்நீருஞ்சீயுநரம்புஞ்செறிதசையும்
வேண்டாநாற்றமிகுமுடலைவீணேசுமந்துமெலிவேனே
நீண்டாய்தூண்டாவிளக்கொளியாயநின்றாயொன்றாயடியானை
ஆண்டாய்காண்டாகனெரித்தவரங்காவடியேற்கிரங்காயே

(எ. து)தீண்டத்தகாத அருவருக்கப்பட்டவழும்பும்உதிரமும்சீழும்நரம்புமிடைக்கிடையே செறியப்பட்ட மாங்கிஷமும்விரும்பப்படாத துர்க்கந்தபலபாண்டமாகியவுடம்பைப்பொல்லாதவினையைச்செய்த அடியேனெடுத்துச்சுமந்து மெலியக்கடவேனே குறளுருவமாய்நீண்டு வளரா நின்றவ

னே தூண்டாதசுடரினதுசோதிப்பிரகாசமானவிளக்கொளியாயெங்கும்பரந்துநின்றுயென்பதுஅறிந்திருந்து மறிந்துகொள்ளமாட்டாத மூடத்தன்மையையுடையேனையும்ஒருபொருளாயாட்கொண்டருளினவனே காண்டாவனந்தகனஞ்செய்தருளியவாங்கனுபகனே அடியேன் கடைத்தேறும்படிக்குத்திருவுளத்திலிரங்கி இரட்சிக்கவேண்டு மென்றவாறு (அடியேனையாண்டாயென்பதன்மையாமற்பின்னுமறங்காவடியேற இறங்காயேயென்று சொல்லவேண்டுமோ வென்னில்மேகமான துஊயர்நீராச்சுத்தோதகமாக்கிவைத்தாலுமற்றுமுருண்டோடிப்பழயபடிக்குஉவர்நீராமாறுபோலஅப்படியாண்டருளினும் அஞ்ஞானத்தாற் கலங்கித்திரும்பித் தேடாமலலருளவேண்டுமென்பதுகருத்து (ருஎ)

தவம்-கலிவிருத்துறை

காயிலைதின்றுங்கானிலுறைற்துங்கதிதேடித்
தீயிடைநின்றும்பூவலம்வந்துந்திரிவீர்காள்
தாயிலுமன்பன்பூமகணன்பன்றடநாகப்
பாயன்முகுந்தன்கோயிலரங்கம்பணிவீரோ

(இ-து) காலையிலைமுதலாகியகந்தமூலபலங்களைப்பட்சித்தும்வனவாசஞ்செய்தும்கெதியைவிரும்பிபஞ்சாக்கினிமத்தியிலிருக்கும்அரிதாகியதபசைச்செய்தும்பூமியிற்பிரதட்சிணமாய்வந்துந் திரியப்பட்டவர்களேசொல்லக்கேளீர் அன்னைபிதாவிலுமதிகமான அன்புண்டானவன்பூமகளாகிய சீதாதேவிக்குநண்பனுகச்சீதரனென்றிருக்கின்றவன் விசாலமான பாம்பாகியபாயலிற்பள்ளிகொண்டருளியமுகுந்தனானவன் அப்படியானவனுடையகோயிலாகிய திருவரங்கத்தைச்சென்றுகண்டுவணங்குவீர்க ளாகவேண்டும்அப்படிவணங்கில்வருந்தாமலெளிதிற்றானேயெல்லாப்பயலனையு மடைந்துய்யலாமென்றவாறு (ருஅ)

இதுவும்அது-கட்டளைக்கலித்துறை

வீராங்காகியவைவனைமாற்றிவிடவரவின்
பேராங்காகநடித்தபெற்றுள் பறிப்பொன்னிநன்னீர்
சீராங்காநின்றுழும்பனென்றேறைங்கைதசெயலது
கூராங்காநெஞ்சமேவஞ்சமாய்க்கொடுவினைக்கே

(எ-து)சோத்திரங்-தொக்கு-சட்சு-சிங்குவை-யாக்கிராணமென்னும் ஐம்பொறியாகியவிவற்றின்வழித்தான்-சதத-பரிச-ரூப-ரச-கெந்தமென்னுந்

ன்மாததினையாகிய வைம்புலவேடராகியவீரர்களா லலைத்தெழுநெஞ்சின் சிலுகைஞானவாளால்மடித்துநஞ்சையுடைய நாகபடத்தினின்றதன்போ ராகியபூசலேயாடரங்கமாக வாடியருளிய வழகிய திருவடிகளையடைந்து பொன்னியாகியகாவேரியின்புண்ணியதீர்த்தச்சிறப்பினையுடையதிருவரங் கேசனேயானுன்னுடைய அடியாற்குமடியனன்வடிமையெனவகைந்துரு கிநெஞ்சமேநீகணப்போதாகிலுங் கருதின துண்டாகில் அதுவேபற்றுக் கோடாகவந்துநம்மைவஞ்சித்துமயங்கப்பண்ணுங்கொடியவினையென்றுமி ரும்பிற்றுங்கூரிய அரமாம்அதையறுத்துதள்ளுதற்கென்றவாறு (௰௯)

## நேரிசைவெண்பா.

கேசவனையேசெவிகள்கேட்கத்திருவரங்கத்
தீசனையேசென்னியிறைஞ்சிடுக-நேசமுடன்
கண்ணனையேகாண்கவிருகண்ணினர்கொள்காயாம்பூ
வண்ணனையேவாழ்த்துகவென்வாய்

(எ-து என்னுடைய அவையவங்களிலிரண்டுசெவிகளும்எவ்விடத்திலு மெக்காலத்திலுமெத்துன்பமெய்துமிடத்திலுமற்றொன்றையுங்கேளாமற் கற்றுணந்தமாய்க்கேசவனுடையகீர்த்தியையேகேட்கக்கடவது அன்றியும் என்னுடையசென்னியாகியசிரம்மற்றொருதெய்வங்களைவணங்காமல் திரு வரங்கேசனாகியதெய்வத்தையேவணங்கக்கடவது அன்றியு மென்னுடைய வுறுப்புகளிலுயர்ந்தஇரண்டுகண்களுமாசையாகயாதொன்றையுங்காணும ற்கண்ணனைத்தானேகாணக்கடவது அன்றியுமென்னுடைய வாயானதுவீ ணிலேவொன்றைத்துதியாமல்காயாம்பூவண்ணனாகியகடவுளையே துதிக்க க்கடவதென்றவாறு. (உ௰)

## இரங்கல்எழுசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்

வாயினிரங்கினையாரமறிந்தனை வாலவளைசிந்தனை தண்
பாயலையுந்தினைமாலையடைந்தனையாரிலுறங்கிலையால்
கோயிலரங்கனைமாகனகந்திகழ்கோனகம்பொலியும்
ஆயிழைநண்பனைநீயும்விரும்பினையாகுநெடுங்கடலே

(எ-து)வாராய்நெடியகடலே என்னைப்போலநீயுங்கோயிலாகியதிருவர கிய திருவரங்கத்திலுள்ள வரங்கநாயகனைப் பெருமைமிக்க கனக மயமாய்க் கதிர்விட்டிலங்கும் கமலமலரிற்பொலிவு பெற்றவாயிழை யாகிய சமலைக்கு நட்பான காதலனை விரும்பினவளாக வேண்டும் அஃ

தெத்தன்மைத்தென்பையாகில் அவர்வந்தணையாதவாற்றாமையினால்யான் வாயினாலிரங்கிப்புலம்புகிறதுபோலநீயுமுன்வாயினாலிரங்கிப் புலம்புகிறாய் அதுவுமன்றியான் ஆபரணமான முத்தங்கங்களைவெறித்தெரிவதுபோல நீயும்ஆரமானமுத்தங்களைவெறுத்தெறிகிறாய் அதுவுமன்றியான்வால்வளையாகியகையிலணிந்த வெள்வளைகளைச் சிந்திவிடுகிறது போலநீயும் சங்கங்களாகிய வெள்வளைகளைச்சிந்திவிடுகிறாய் அதுவுமன்றியான்கண்படைகொள்ளுந்தண்மைபொருந்திய பாயலைவிரும்பாமற்றள்ளி விடுகிறதுபோலநீயும்பாயப்பட்ட அலையாகியபாயலைத்தள்ளிவிடுகிறாய் அதுவுமன்றியான்மயலாகியமாலையடைந்ததுபோலநீயுமருளினதொழுங்காகிய மாலையடைந்தாய் அதுவுமன்றியானிரவொருகமாயுறங்காமையாயிருந்தாய் ஆகையால் யானொருத்தியுமிவ்வாறாயினேபோவென்றுதலைவிகடலின்மேல்வைத்திறங்கினதென்றவாறுமாலையடைந்தனையென்பதற்குமாலென்பதுபெருமையாதலாற்பெருமையடைந்தாயென்றுரைப்பாருமுளர் ௨௩

இதுவும்அது-கலிநிலைவண்ணத்துறை

கடல்வழிவிடநிசிரர்பொடிபடவிருகண்சிறி
வடகயிலெழு விடைதழுவியது மறந்தாரோ
அடலறவமளியிலறிதுயிலமருமரங்கேசா
இடர்கெடவருகிலர்முருகலர்துளவுமிரங்காயே

(எ-து)முற்காலத்திற்சீதையென்னுமொருபெண்ணை வேண்டிக்கடலானது அஞ்சிவழிவிட்டுவணங்கச்சேதுபந்தனஞ்செய்துபோய் இலங்கையிலுண்டான இராவணன்-கும்பகர்ணன்-முதலான அரக்கரெல்லா மாண்டுதூளிபடலமாகத் திருக்கண்சிவந்ததுமன்றி மறுபடி வெள்ளிமலையிலும்விசேஷித்துவிளங்கப்பட்ட விடைகளாகிய எருதுகளேழையுஞ்சத்தியையென்னுமொருபெண்ணுக்காத்தழுவியவளையணைந்ததுவு மறந்துவிட்டாரோ வென்னவேமறவாமல்செய்தாரெனப்படுமாதலால்என்னுடையவிடருகெடும்படிக்கிசைந்துவந்தணைந்தவருமல்லஅப்படியணைவதற்கியையாராகில் துளமாலையையாகிலுமிரங்கித்தந்தவருமல்லவலியினையுடையஅரவாகியபுமளியில்யோகநித்திரையாயமைந்தருளியவரங்கநாயகரானவராதலால் அவரருளானதுஒருதன்மையாயிருந்திலதென்றென்றவாறு ௨௪

ROSA MUTHIAH
KOTTAIYUR-623 106

நேரிசை-வெண்பா

இரங்கத்தனித்தனியே யெய்துகின்றதுன்பத்
தரங்கத்தையேதாற்றடுப்பீர்-அரங்கர்க்குக்
கஞ்சந்திருப்பாதங் கார்மேனியென்றவர்பால்
செஞ்சந்திருப்பாதநீர்

(எ-து)சமுசாரமாகிய சாகரத்திலழுந்தித்தளர்ச்சியற்றிரங்கும்படிக்குத்தனித்தனியேயொன்றின்மேலொன்றுயோயாமலோடிவரப்பட்ட மாயாவிகாரமாய்மட்டிற்கரியமனோதுக்கமாகிய தரங்கமென்னுமலைகளையேகைக்கொண்டுதடுக்துயவீரோழைகளால் அரங்கநாயகனார்கம்போருகம்போலும் அழகியதிருவடியே அறுக்கார்மேகம்போலுங் கரிய திருமேனியென்றும் உவமிக்கப்படாமைக்கு வமித்துய்யவேண்டித் தீயநெறிக்கட்செல்லுஞ் சித்தத்தைஅந்நெறிக்கட்செல்லாமல் அவர்பாலிற்செல்லத்திருப்பமாட்டாத இடசித்தமில்லாத நீங்களென்றவாறு (உ௬)

இரங்கல்தாழிசை.

நீரிருக்கமடமங்கைமீர்கிளி கடாமிருக்கமதுகரமெலாம்
நிறைந்திருக்கமடவன்னமுன்னசிளாயாயிருக்கவுமையாமல்யான்
ஆரிருக்கிலுமென்னெஞ்சமல்லாதொருவஞ்சமற்ற துணையில்லையென்
றுதரத்திலொடுது துவிட்டபிழையாரிடத்துறைசெய்தாறுவேன்
சீரிருக்குமறைமுடிவுதேடறியதிருவரங்கரை வணங்கியே
திருத்துழாய்தரிதல்விரும்பியேகொடுதிரும்பியேவருதலின்றியே
வாரிருக்குமுலைமடர்மடந்தையுறைமார்பிலேபெரியகோளிலே
மயங்கியின்புறமுயங்கியென்னையுமறந்துதன்னையுமறந்ததே

(எ-து)வாருங்கள்மடபத்தினையுடைய மங்கைமீரேஎன்மனதிற் கிசைந்தநீங்களனைவருமிருக்க நானுசையாய்வளர்த்த கிளிகளுமென்கையிலிருக்குமணங்களுக்காகவராநின்ற வண்டுசாதிகளும் நிறைந்திருக்கமடமையையுடைய பேடையன்னங்களும்முன்னே கிளைகளாயிருக்க இவையெல்லா நம்பாமலெவர்களிருந்தாலும்என்னிதயத்தை தவிட வேறொருவிசுவாசமான துணையில்லையென்று விசாரித்துத்துணிந்து ஐயப்படாமல லாதரவினுடனே யதைத்தூதனுப்பியான் மோசம் போனபிழைநாணமின்றி முகம்பாராதாரிடத்திலே சொல்லியாறப்போறேன் அதையாதெனில் என்னிதைமையமாணசெய்திசிறப்பினையுடைய வேதமுடிவிலேயும் திருவரங்கரைக்கண்டுசேர்ந்துதெண்டன்செய்துவிண்ணப்பஞ்செய்கையால்அவரிரங்கித் திரு

த்துழாய்மாலையைத்தந்தாராகில் விரும்பிவாஙகிக்கொண்டு திரும்பிவரவேண்டுமென்பதில்லாமல்கைச்சார்ந்தகனதனத்தையுடையு மலர்மடந்தையாகியமகாலட்சுமி வாசமாகியவர் மார்பினுடைய அழகிலேயும் பெரிதாகிய தோளினையுடையஅழகிலேமயக்கி இன்பமுறப்பொருந்தி என்னையுமறந்துதூதாகப்போனதன்னையுமறந்துவிட்டதாகி உலகத்திலே துன்பத்திறகியாரோதுணையவர்தம்முடையநெஞ்சந் துணையலவழியென்ப தென்னிடத்திலிருக்கயான்யாரைவெறுப்பேனென்றவாறு. (உச)

இதுவும்அது-நேரிசைவெண்பா

மறக்குமோகாவின் மதுவருந்தியப்பால்
பறகுமோசந்திமுன் பாமோ-சிறக்கத்
தருவரங்கள்கேட்குமோ தாழ்க்குமோநெஞ்சே
திருவரங்கர்மாற்போனதேன்

(எ-து) நான்நமதுதிருவரங்கேசரிடத்திலே தூதாகச்செலுத்தினவண்டானது அங்ஙனஞ்சென்றவுடனே யென்னைமறந்துபோய்விடுமோஅல்லவென்றுபூங்காவிலேபோய்ப் புஷ்பங்கடோறும்மதுக்களைமவந்து பானம்பண்ணிஅப்பாற்பறந்து தான்போய்விடுமோஅல்லவென்று சந்நிதிக்குமுற்பட்டுநிற்குமோஅல்லவென்றுசிறப்பிக்கும்படிககுஅவர் தரப்பட்டவரங்களைக்கேட்டுநிற்குமோ அல்லவென்றுசற்றுத்தாழ்ந்துதானிற்குமோயானிவ்வகைத்தோன்றியாது மறிந்திலென்என்செய்வேனென்றவாறு (உரு)

அம்மானை-மடக்குத்தாழிசை

தேனமருஞ்சோலைத் திருவரங்கரெப்பொருளும்
ஆனவர்தாமாண்பெண்ணலியலர்காணம்மானை
ஆனவர்தாமாண்பெண்ணலியலரேயாமாகில்
சானகியைக்கொள்வரோ தாரமாயம்மானை
தாரமாய்க்கொண்டதுமோர் சாபத்தாலம்மானை

(எ-று)வண்டுசாதிகள்மருவாநின்ற பூங்காவனஞ்சூழ்ந்த திருவரங்கத்திலிடத்திலேயெம்பெருமானெழுந்தருளியிருக்கப்பட்டவர் ஆணுமல்லாதபெண்ணுமல்லாதவர் அலியுமல்லாதவராகில்சானகியாகியசீதையைத்தாரமாய்க் கொள்கைக்குத் தகுமோவென்றால் அம்மானையப்படித் தாரமாகக்

கொண்டதுமொருசாபமாகியவில்லையொடித்ததனால் அம்மானை யென்றவாறு(அறியதுபாடிலம்மானையாதலால்அப்படித் தாரமாய்க் கொண்டதுவொருசாபகாரணத்தாலென் றுள்ளதாயுரைத்தமையுமறிந்துகொள்க)

## இரங்கல்-மடக்குத்தாழிசை

மானையெய்தவரின்னமென்மடமானையெய்திலர்நேமியால்
மாலைதந்தவர்பைந்துழாய்மதுமாலைதந்திலரிந்திரன்
சோனைமாரிவிலக்கிவிட்டவர்சொரிகணமாரிவிலகிலார்
சுரர்களுக்கமுதங்கொடுத்தவர்சோதிவாயமுதங்கொடார்
தானையவர்கொடிக்களித்தவர்தானைகொண்டதளிக்கிலார்
சங்கரற்கிரவைத்தடுத்தவர்தையலுக்கிரவைத்தடார்
ஆனைமுன்வருமன்புளார்முலையானைமுன்வருமன்பிலார்
அணியரங்கர்நடத்துநீதியநீதியாகவிருந்ததே

(எ-து) முன்புமாரீசனாகியமானைபம்பினா லெய்தவரிப்போ இன்னமுமென்னுடையமடமானாக்கத்திலேமானையொப்பானை யெய்தில ரென்னவே உய்தப்பொறுகின்றிலயென்பதாயிற்றி அன்றியுஞ்சக்கராயுதத்தினாற்பொனுதைமறைத்துமாலையாகியசெவ்வந்துமாலையைத்தந்தவர்பசுமைபொருந்திய துளவமாலையைத்தந்திலா அன்றியுந்தேவேந்திரனால் விடுபட்டுவந்து பொழியப்பட்டசோனைமழையைவிலக்கிவிட்டவர்சொரியப்பட்ட கண்மாரியைவிலக்கிவிடுகின்றிலா அன்றியுந்தேவர்களுக் கெல்லாமமிர்தத்தைக்கொடுத்தவர் செவ்வியவொளிசிரந்ததமதுதிருவாய மலரிடத்துண்டாகியவமிர்தத்தைக்கொடுக்கிலர் அன்றியும்ஐவர்கொடியான துரோபதைக்கு மானரத்துகிலையளித்தவர் இங்ஙனமெனசிறியபேதைத்தன்மையுடையவட்குச்சரிந்துசோர்ந்த துகிலையளித்தவர்சங்காருக்கிரவச்சத்தைத்தடுத்தவர்தையலானவட்கிரவுநீட்டிக்குமச்சத்தைத்தடுக்கிலர் அன்றியுங்கெஜேந்திரனாகியயானைக்குமுற்பட்டுவரும்படிக்கு அன்புண்டானவர் முலையாகிய கொங்கைப்பேரானைக்குமுற்பட்டுவரும்படிக் கன்பில்லாதவராயிருந்தார் ஆகையால் அழகிய திருவரங்கேசாநடத்துகின்ற நீதியெல்லா மநீதியாயிருந்ததென்றவாறு. இவையெல்லா முமடோரடையாய்)முடித்தவாறறிக (உஎ)

## எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இருளினும்வெளியினுமருளினுந்தெருளினும்
　இன்பமேயடையினுந்துன்பமேமிடையினும்
ஒருவர்முன்புகழினுமிருவர்பின்புகழினும்
　ஊனிறந்தழியினும்யான்மறந்தொழிவனோ
சுருதிநின்றோலிடுங்காதலந்நாலொடும்
　துவளுநூன்மார்பமும்பவளவாய்மூரலும்
திருவரங்கேசர்தஞ்சுருள்கருங்கேசமும்
　செய்யநீண்முடியுமத்துய்யசேவடியுமே.

(எ-து) இருளாகிய போதிலும் பகலாகிய போதிலும் மாயையின்வசம் தனாய் மயங்கினாலும் அப்படிமயங்காமற் றிடச்சித்தனாய்த் தெளிந்தாலும் இன்பமானதெய்தி யின்புற்றாலுந் துன்பமானது துன்னித்துன்புற்றாலும் ஒருவர் முன்னின்று புகழ்ந்தாலும் அப்படிப்புகழ்ந்தவா முன்புகழ்ந்தாலும் முன்னாலமைந்தவிவ்வுடம்பேபிறந்தழிந்துபோனாலும்யான்மறந்தொழிந்திருக்க வல்லவனாவேனோ நான்குவேதமும்முறையிடப்பட்ட திருவரங்கேசருடைய நான்குபுயங்களையும் புரிநூலானது துவண்டு புரளாநின்ற பொலிவினையுடைய மார்பினையுஞ்செம்பவளம்போன்ற திருவாயிற்சிறந்த முத்தினையொத்த முறுவலையுஞ்சுருண்டு சிருபையுற்ற சோதியான கேசத்தையுஞ் செவ்விதாய்நீண்ட திருமுடியையுங் வண்மையுடனே தூய்பதாய்ச் சிவந்ததிருவடித்தாமரையையு மெக்காலத்துமறவேனென்றவாறு, ()

## நேரிசைவெண்பா.

சேவடியார்மூக்டிமண்டென்னரங்கத்தம்மானீ
மாவலிபால்வாங்கியநாண்மண்ணுலகோ-மூவுலகும்
வீசுங்காலோவலியவெவ்வினையேனெஞ்சமோ
பேசுங்காலேதோபெரிது.

(எ-து) தெற்குத்திசைக்குத் திருப்பதியாகிய திருவரங்கத்திலுள்ள சுவாமி அடியேன்விண்ணப்பங்கேட்டருள்வாயாகவேண்டும் தேவரீர்மாவலினிடத்திலே வாமனவடிவாய்இரந்து உமதுசேவடியினாலே மூவடிமண் கேட்டு வாங்கினவங்காளிலே பூமியந்தர சுவர்க்கமான மூவுலகவீசிவிளங்கியபாதமோ பெரிதானது அல்லவென்று தீவினையினுடைய சிறிவானசிந்தைதானோ பெரிதானதென்றுபேசுமளவில் இம்மூலவுலகுமிருக்குமிடம் விசாலமன்றிநீண்ட திருவடியானதென் சிந்தையிலடங்கிநீங்காமல் நிறைந்திருக்கையால் என்னெஞ்சமே பெரியதென்றவாறு. (உக)

நாரைவிடுதூது-கட்டளைக்கலித்துறை.

பெருவரங்கேசவனல்லாதருள்செயும்பேரிலையே
ஒருவரங்கேசற்றுமோதாரெனகாதலையோடியெங்கும்
கருவரங்கேசலிக்கத்திரிவோர்க்குக்கருணைசெய்யும்
திருவரங்கேசற்குநீசொல்லல்வேண்டுஞ்செழுங்குருகே.

(எ-து) எனக்குப்பெரிதாகிய வரந்தந்தாள்கைக்குக் கேசவனல்லாதபேரில்லை என்காதலையுன்னைவிட வொருவருமவர்க்குச் சற்றுகிலுந்தெரியப்படச்சொல்வாருமில்லை ஆகையாலேவீணுகக்கருவரங்காகிய கெறபக்கிரகங்கடோறும் பிறந்துமிறந்து முழலப்பட்டதிருவரங்கேசருக்கு நீயேபோய் என்துயரமெல்லாஞ் சொல்லவேணுஞ் செழுமைபொருந்திய குருகாகிய புள்ளே யென்றவாறு. (க௯)

இரங்கல்தாழிசை,

குருகுறங்குகானலேகருநிறங்கொள்பானலே
கொடியிருண்டஞாழலேநெடியகண்டனீழலே
பெருகுதரங்கவேலைபோசிறுதரக்கமாலையே
யோலந்திபோதகம்புளேயெதையுன்றியம்புகேன்
திருவரங்கரிணையிலாவெறுபுயங்கவணையிலே
திகழ்வலக்கைகீழ்தாமுகிழ்மலர்க்கண்வளர்வதோர்
கருணைகம்புவதனமுமமறுவைவிம்பவதரமும்
காவிகொண்டமேனியுமாவிகொண்டபோனவே,

(எ-து) குருகாகியபட்சிசாலஞ்சஞ்சரித்துறங்காநின்ற கானலாகியகடற்கரையே கரியநிறங்கொண்ட பானலாகிய யாறுங்குவளையேகொடியிருண்டஞாழலாகியதறுவே நெடியதாய் நிழலை நிழற்றுகின்றதாழையே யொறுதப்பட்ட தரங்கமாகிய அலைகளையுடைய சமுத்திரமே சிறுதாகிய விராக்கதருடைய நிறம்போன்ற மாலையாகிய அந்தியேபோதாகிய பூந்தாதிகளைப்பொசிக்கப்பட்ட கம்புகளாகிய சம்பங்கோழியே உங்களுடனே இப்போயான் எதையென்றெடுத்துச் சொல்லப்போகிறேன் திருவரங்கருடையவிணையில்லாத வெறுபுயங்கமாகிய பாம்பணையிலேதிகழ்ந்து பிரகாசிக்கும் வலக்கையைத் திருமுடிக்கீழேகொடுங்கையணையாகக்கொடுத்து முகளிதமாகிய மலர்க்கண்வளராநின்ற வொருவப்பற்ற கருணைவெள்ளங் குடிகொ

ண்ட முகாம்புயமுஞ்சிவந்த ஆதொண்டைப்பழத்தையொத்தவதரமுங்கா வியாகிய கருக்குவளைப்பூவையொத்த திருமேனியுமாகிய இவ்வவயவங் களோடுமுண்டான அழகுகளெல்லாங்கூடி யென்னுவியாகியபிராணனை க் கொள்ளைகொண்டுபோயிற்றென்றவாறு, (ருக)

பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்,

போனகம்பதினாலுபுவனந்திருப்பள்ளி
 பொறியரவணைப்பாற்கடல்
பூமடந்தையுநிலமடந்தையுந்தேவியர்
 பூராதனமறைக்குமெட்டா
வானசம்பேரின்பமுடன்வீற்றிருக்குமிடம்
 வானகம்வயினதேயன்
மலர்வந்தநான்முகன்றிருமைந்தன்வன்மைந்தன்
 மதிசூடிவாசவன்முதல்
தேனகுந்தொடைமவுலிமுப்பத்துமுக்கோடி
 தேவருன்தேவல்செய்வோர்
திங்களும்பரிதியுஞ்சங்கமுந்திகிரியுந்
 திரிவனவுநிற்பனவுமாம்
ஞானமன்னுயிர்முழுதும்விளையாடனீவருத்
 திட்டபலமாயையதனால்
எழிலரங்கதுயிலுமெம்பிரானின்பெருமை
 யாவரோவாழ்த்துவாரோ

(எ-து) அழகியதிருவரங்கத்திலே சேஷசயனத்திற் றிருக்கண்வளராநி ன்றசுவாமி தேவரீருக்கும்போனகமாகிய பொசிப்பாவது பதினாலுபுவன மும் அதுவுமன்றித் தேவரீருக்கழகிய பள்ளியறையாவது பொறியரவெ ன்னும் பாம்பாகியவணையையுடைய திருப்பாற்கடல் அதுவுமன்றித்தேவ ரீருக்குத்தேவிமாராகிறவர் ஸ்ரீதேவியும் பூதேவியும் அதுவுமன்றித்தேவரீ ருக்கு வின்பத்தோடுங்கூடிப் பரவாசுதேவர் எழுந்தருளியிருக்குமாவது புராதனமாகிய நான்குவேதத்துக்குமெட்டாதவைகுண்டலோகம் அதுவுமன்றி த் தேவரீருக்குவாகனமானது வயினதேயனாகிய கருடன் அதுவுமன்றித் தேவரீருக்குவந்து யேவற்றொழில்செய்யப்பட்டவர்கள் உனதுஉந்திக்கமல த்திற்பிறந்த பிரமதேவனாகிய பிள்ளைக்குப்பிள்ளையாகி பிறையைச்சூடின வன் தேவேந்திரன் முதலாகிய கற்பகப்பூத்தேன்றுளிக்காநின்ற பூமாலை

பொருந்திய பொன்முடிதரித்த முப்பத்துமுக்கோடிதேவர்கள் அதுவுமன்றித்தேவரீருக்கு ஆயுதமாவது சந்திரசூரியராகிய சங்குசக்கராயுதம் அதுவுமன்றித் தேவரீருக்கு விளையாடலானது பலபலமாயையாகவகுக்கப்பட்ட தத்துவனமும் ஊர்வனவும் தவழ்வனவும்நிற்பனவுமுதலாகிய சகலசீவராசிகள் ஆகையால் தேவரீருடைய பெருமைவையவராலறிந்துபுகழப்படுமென்றவாறு, (௩௨)

இரங்கல்-இதுவுமது,

வாழுமௌலித்துழாய்மணமும்மகரக்குழைதோய்விழியருளும்
மலர்ந்தபவளத்திருநகையுமார்பிலணிந்தமணிச்சுடரும்
தாழுமுளரித்திருநாபித்தடத்துளடங்குமனைத்துயிரும்
சரணக்கமலத்துமைகேள்வன்சடையிற்புனலுங்காணேனால்
ஆழமுடையகருங்கடலின்கடுகிழியச்சுழித்தோடி
அலைக்குங்குடகாவிரிநாப்பணைவாயரவிற்றுயிலமுதை
எழுபிறப்பிலடியவரையெழுதாப்பெரியபெருமானை
எழுதவரியபெருமானென்றெண்ணாதெழுதியிருந்தேனே

(எ-து) திவ்வியமங்களசுருபமாய்ச்சிறந்த திருமுடிசூடியதுளபமாலிகையின் சுகந்தத்தையும் திருமகரக்குழைவிளங்கிய திருச்செவியிற்சென்று சேராநின்ற கடாட்சவீட்சணத்தில் பெருங்கருணைவெள்ளத்தையுஞ் செம்பவளம்போன்ற திருவரங்கமலராற் சிறந்தசிறுநகையையுந்திருமார்பிலணிந்த கவுஸ்துவாபரண மிளியின்சோதியையுந்தாழ்ந்து குழிந்ததாமரையாகிய நாபித்தடத்துக்குள்ளாயடங்கிநின்ற சர்வசீவராசியையுஞ்சரணாரவிந்தத்தில் உமாபதியினுடைய சடைக்கங்கையும் நான்காணேன் ஆகையாலாழமுண்டான கருங்கடலினுடைய அகடாகிய வயிறுகிழியச்சுழித்துக் கொண்டோங்கி அலைக்காநின்ற குடகாவேரிக்குநடுவே ஐந்துவாயையுடையபாம்பாகிய அணையிலே யறிதுயில்கண்வளர்ந்தருளி யமுதம்போன்றவனைத் தமக்கு அடியாரானவர்களுடைய எழுபிறவித்தொகையையு மியமன்கணக்கிலெழுதாத பெரியபெருமானை யெழுதற்கரிய வெழிலுடைய பெருமானென்றுமெண்ணாமல் என்பேதையாகிய புத்தியினாலிப்படத்திலென்னென்று துணிந்துவெழுதியிருந்தேன். (௩௩)

இதுவுமது-எண்சீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்.

இருங்குங்குமத்தோளரங்கேசர்முன்னாள்
இலங்காபுரங்காவலன்தாரினுல்வீழ்

கருங்குன்றுபோன்மண்முகக்குத்திவீழக்
கண்டாரெனக்கின்றுதண்டாளிரத்தால்
மருங்கெக்கும்வம்போதுவார்வாயடங்கும்
வாடைக்குநிலமங்கையாடைக்குநோகேன்
நெருங்குந்தனஞ்சந்தனம்பூசலாகும்
நீளாதிராமையன்மீளாதிராகே

(எ-து) பெரிதாகிய குங்குமங்களைக்கொட்டாநின்ற கோளினையுடைய வரங்கநாயகர் முற்காலத்தில் இலங்காபுரிக்குக்காவலனாகிய இராவணனைக் காலாலியசண்டமாருதத்திலகப்பட்டு விழாநின்ற கருமலைபோல மண்ணிலேமுகங்குத்தித் தலைகீழாய்விழும்படிக்குச்செய்தவர் இப்போதெனக்குத் தண்மையையுடைய மாலையைத்தந்தாராகில் இவ்விடத்திலெங்கெகுமலர் தூற்றுவாருடைய வாயலராகாமலடங்கும் அதுவன்றியும்வாடையாகியகாற்றுக்கும்நிலமங்கையாகியகடலுக்கும்யான்நோக்கத்தக்கதில்லை இழையுந்துழைப்படாதநெருக்குதலையுடையதனத்திலே நற்சந்தனக்குழம்பைத் தடவலாகும் இரவும்நீட்டியதென்றுசைநோயும்நீங்குமென்றவாறு (௩௪)

அறுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்

தேடுகின்றனையைம்பொறிகளுக்கினிமேதேடியுங்கிடையாமல்
வாடுகின்றனைவீடுசென்றெனினிமருவுவைமடநெஞ்சே
ஆடுகின்றிலைபழுகிலையரங்கனைக்கரங்கூப்பிப்
பாடுகின்றிலைநினைகிலையடியார்தம்பாடலின்படியே

(எ-து) அல்லும்பகலும் அவமேதிரிந்தைம்பொறியாகியமெய்- வாய்கண் மூக்குச்- செவியென்பதற்குச்-சத்த பரிச ரூப ரச கந்தமாகிய பொசிப்புகளைத்தேடாநின்றாய் அப்படித்தேடியுங்கிடையாமையாய்வாடாநின்றாயாகில்நமக்குமோட்சமாகிய வீட்டினிடத்திலே இனியென்றைக்குச் சேரப்போறாய்மடமையையுடையநெஞ்சமே அரங்கநாயகனை இரண்டுகைகளையுங்குவித்துப்பாடுகிறாயில்லை ஆனந்தமாகநின்றாடுகிறாயில்லை திருவடிகளிற்றொண்டாகி அழுகிறாயில்லைநினைந்துநினைந்துபரவசமாகிறாயில்லை பத்திமானாகிய ஆழ்வாராதியர்பாடினபாடலையும்படிக்கிறாயில்லை-எ-று (௩௫)

எழுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

ஆயினைமனையைச்சேயினைப்பிதாவை
அனைத்தினைத்தனத்தினைவிரும்பும்

பேயினைமறந்துநோயினைமூப்பைப்
பிறப்பினையிறப்பினைத்துடைப்பீர்
ஆயனைமுளரிவாயனையெங்கள்
அமலனைக்கமலனைப்பயந்த
தாயனைநெடியமாயனைவடபாற்
றரங்கனையரங்கனைத்தொழுமே.

(எ-து) மாதாபிதாவையும்; பெண்டீர்பிள்ளையும் அன்னத்தையும் சொர்ன்னத்தையும் மற்றுமுள்ள பண்டபதார்த்தங்களையும்பொய்யென்று நினையாமல்மெய்யென்றுவிரும்பும்பேயாகியபித்தைமறந்துநோயையு மூப்பையும்பிரப்பையுமிறப்பையுந்துடைத்து அடியினைக்கருதுவீர்கள் எப்படியென்றாலாயனாகியகோபாலனைமலர்ந்த செந்தாமரையையொத்தவாயுடையவனைஎங்கள்மும்மலத்தையுமொழிக்கப்பட்டவ மலனானவனைக் கமலனாகியபிரமதேவனைப்பெற்றதாயானவனைநெடிதாகியமாயனை வடபத்திரத்திலும்பாற்கடலிலும்பள்ளிகொண்டவனையரங்கநாயகனையடைந்து தொழுது கொள்ளுங்களென்றவாறு. (௩௬)

மடக்குக்கட்டளைமண்டலக்கலிப்பா.

தொழப்பெறுதந்தவாரணத்தந்தமே
தொட்டிறுத்ததும்வாரணத்தந்தமே
வழுத்துகாண்முன்புவனங்கடந்ததே
மலர்ந்தவுந்திபுவனங்கடந்ததே
ஒழித்ததுங்குழைச்சங்கரன்சாபமே
ஒசித்ததுங்குழைச்சங்கரன்சாபமே
அழித்ததும்பொருதானவரங்கமே
அரிதனூரினிதானவரங்கமே

(எ-து) அரங்கேசருடையபெருமையைஇத்தன்மைத்தென்றறிந்துதொழமாட்டாததுவும் அழகியவேதாந்தமேஅவர்தங்கையினாலேதொட்டுமுறித்ததுவும்யானைக்கொம்பையேயவர் முன்பு சீதைப் பிராட்டியாருடனேவனங்களைக்கடந்துசென்றதுவும் தொண்டர்களாயுள்ளோர் யாருந்துதிக்கதிருவடியேஅதுவுமன்றிஇப்புவனங்களையெல்லாம் பெற்றதுவும் அவருடையமலர்த்தாபிக்கமலமே அதுவுமன்றியொருவராலுமொழிக்கற் கரியதை அவரொழித்ததுவுந்துயரமுற்றசங்கரனுடைய சாபத்தையேதறலும்யாவராலும் வளைக்கப்படாதத்தையவர்களைத்தொ..த்துவுங குழையாகச் ..ங்கைத்தரித்த அரனுடையவில்லையேமற்றுமவனழிக்கிறதும் பொருதப்

பட்ட அகத்தையே அவனுக்கிருப்பிடமாகத் தேவலோகத்திலுமினிதான
து அரங்கமாநகரமேயென்றவாறு. (௩௭)

நேரிசைஆசிரியப்பா உயிர்வருக்கைமோனைகாண்க.

அரங்கமாளிகைக்கருங்கடல்வண்ணனை
ஆலிமாமுகிலை வாலிகாலனை
இந்தளூருறையெந்தைபெம்மானை
ஈசனான்முகன்வாசவன்றலைவனை
உள்ளுவாருள்ளத் துள்ளுறைசோதியை
ஊரகநின்றரு ணீரகத்தடிகளை
எவ்வுண்மாயனைத் தெய்வநாயகனை
ஏர்மலிசிகரத்து நீர்மலையாதியை
ஐவாயரவி லறிதுயிலம்மானை
ஒருகான்மொழியினுமொழிகுவைநெஞ்சே
ஓதநீர்ஞாலத்துழலும்
ஔவியபிறப்பி லழுந்திவாடுவதே

(எ-து) அரங்கமாகியமாளிகையினிடத்தில்வாழுங்கரியகடலையொத்ததி
ருமேனியின்வண்ணத்தையுடையவனை யாலினிடத்திலே மாவாகிமகாலட்
சுமிக்கும்முதன்மையானவனை-வாலிக்கு வலியகாலனானவனைத் திருவிந்த
ளூரிலுறைப்பட்ட வெந்தையாகியசுவாமியைஈசனென்றும்நான்முகனெ
ன்றும், வாசவனென்றுஞ்சொல்லப்பட்ட இவர்களுக்குத்தலைவனானவனை
ஓயாமல்நினைப்போருடைய நெஞ்சகத்துள்ளேநிறைந்த ஜோதியானவனை
திருவூரகத்திலேநின்றருளிய திரிலோகத்தடிகளாகிய தேவனைத திருவெவ்
வுளூரில் வீரராகவனென்னுமாயவனை திருவயிந்திரபுரத்திற்றெய்வனானவ
னைஅழகின்மிகுந்தசிகரங்களையுடைய நீர்மலையினிடத்திலெனக்கெந்தை
யா யிருக்கப்பட்டவனைஐந்துதலையையுடையவரவணையிலறிதுயிலாகவம
ர்ந்தருளியஅமலனானவனை நெஞ்சமே ஒருதரம்அவனதுதுதியைசொன்னா
யேயாகிலுமொழித்துவிடலாம்கடல்சூழ்ந்தவுலகத்திலேயுலாவி நின்றுழ
லுமௌவியமென்னும்பொய்மையாகியபிறவி சாகரத்தி லழுந்திவரப்பட்
டதுன்பமெல்லாமென்றவாறு. (௩௮)

## இரங்கல்-தாழிசை

வாடியோடவனசமன்னவிருகண்வெள்ளமருவிபோல்
மருவிடோயமதனன்வாளியுருவியோடவாடையூ
டாடியோடவன்றிலோசைசெவியிலோடவண்டுழாய்
ஆசையோடுமெங்கள்பேதையாவியோடனீதியோ
மோடியோடவங்கிவெப்புமங்கியோடவைங்கரன்
முடுகியோடமுருகனோடமுக்கணீசன்மக்களைத்
தேடியோடவாணனாயிரம்புயங்கள்குருதிநீர்
சிந்தியோடநேமிதொட்டதிருவரங்கராஜனே

(எ-து) மோடியாகிய மூதணங்குதோற்றோடவும் அங்கியாகிய நெருப்பினுடையவெப்பமுமடங்கியோடவும் ஐந்துகரமுடையயானைமுகவன்முடுகியோடவும் அவன்தம்பியாகியமுருகனவன்பின்பு கடுகியோடவும்,மூன்றுகண்ணினையுடையஈசனவன்மக்களைத்தேடியோடவும்வாணாசுரனுடையஆயிரம்புயங்களினுமிருந்துகுருதிநீர்வெள்ளமானதுகுதித்தோடவும்சக்கராயுதத்தைவிடுத்தருளிய திருவரங்கராஜனே எங்கள் பேதைத்தன்மையையுடையவளுடைய கமலம்போன்றவிருகண்மலரும்வாடிப்போகவும், மன்மதனெய்யப்பட்ட வைங்கணையும்பட்டுருவியோடவும்,வாடையானதுவந்திழைந்தோடவும், அன்றிலாகியபட்சியினுசையினால் இருசெவியிலும் நுழைந்தோடவும்.வண்மையுடையஉமது துளபமாலைமேல்வைத்தஆசையுடனேகூட அவளாவிகூட்டிலிராதநீங்கியோடவும்நீதியோ சொல்லுமென்றவாறு. (௫௯)

## கலிங்சந்தவிருத்தம்.

சருகருந்தியைம் பொறிவருந்தருந்
தவர்களண்டர்குஞ்சரமுகன்மகன்
பரிதிசந்திரன சிவனயனபுரந்
தரனிரந்தாமபரவுமெந்தையூர்
குருகைகஞ்சைதென் கணபுரகுறுங்
குடிகுடந்தைவண்டுவளாயிந்தனூர்
திருவைகுந்தமந் சனசிலம்பயிச்
திருபுரஞ்செழுந் திருவரங்கமே

(எ-று) சருகுமுதலாகிய பொசிப்புகளைப் பொசித்து ஐந்துபொறிகளும் வருந்தப் பட்ட அரிய தபோதனர்கள் - தேவர்களா

ஆனைமுகவன் ஆறுமுகவன் சந்திரன் சூரியன் சிவன் அயன் தேவேந்திரன்முதலானபேர்கள் சதாகாலமும்பரவிப்பணியுமெந்தையாகிய எம்பெருமானுக்கு யிருப்பிடமாகியவூராவது திருக்குருவை திருத்தஞ்சை திருக்கண்ணபுரம் திருக்குறுங்குடி திருக்குடந்தை திருத்துவரை திருவிந்தளூர் திருவைகுந்தம் திருநீலகிரி திருவயிந்திரபுரம் செழிப்பினையுடைய திருவரங்கமுதலானமற்றுமுள்ள தலங்களுமாமென்றவாறு. (௪௰)

மடக்குக்கொச்சகக்கலிப்பா.

திருவரங்கத்திருக்கோயில்சேர்ந்துமதுதிருக்கோயில்
தருவரொன்றும்வைகுந்தயங்கொளிசேர்வைகுந்தம்
ஒருமருங்கிணைந்துடையாரொழிந்தோர்சனனந்துடையார்
மருவமறந்திருப்பீரோவணங்கமறந்திருப்பீரோ

(எ-து) திருவரங்கமாகிய வழகியகோயிலைச்சென்று சேர்ந்துஉங்கள்இருக்காகிய தீவினைகளெல்லாந்தீர்ந்துதேபானால் தருவர்எக்காலமுந்தாமிருந்தருளியதம்முடைய வொளிருமொளிசேர்ந்த வைகுந்தத்திலிருக்கும் பதவியையொருவருமருங்காகிய இடதுகையிலேந்திய சங்கத்தையுடையவரேயன்றி மற்றொருவருங்கள் செனனத்தைப்போக்கமாட்டார்கள் ஆகையாலவருடைய திருவடித்தாமரையை மருவுதற்குப்பொருந்தாமற்போகப்பட்டமாறுபாடாகிய உங்கள்மனதைத்திருப்புங்கள் வணங்குகிறத்துக்கு மறந்திருக்கப்பட்டவர்களேயென்றவாறு. (௪௧)

சித்துகட்டளைநிலைக்கலிப்பா.

திருப்பொற்பாவைக்குக்கஞ்சம்பொன்னாக்கிய
சித்தரோஞ்சுத்தக்காயாமலரொண
உருப்பொற்பான்திருவரங்கேசனூர்
ஊரகத்துமின்றூர்சென்றிறைஞ்சினோம்
இருப்புப்பாடகங்காட்டினர்யாமவர்
இருப்பையாடகமாகவினமீயத்தை
நருக்கிவெள்ளியதாகவுருக்குவோம்
நமதுவித்தைக்கழுதேயருமையே

(எ-து) திருப்பொற்பாவையாகிய சிதேவிக்குக்கஞ்சமாகிய வெண்கலத்தைப்பொன்னாக்கிய சித்தர்நாம்நமக்திருண்டகாயாம்பூவையொத்தவடிவ

மூகிய திருவரங்கேசரானவர் இருவூரகமாகியவிடத்திலிருக்கும்போது சென்றிறைஞ்சினோம் அப்போதவரிருப்புப்பாடகங்கட்டினர் நாமவருக்கு அந்த விரும்பையாடகமாகிய பொன்னாகச்செய்தோம் அதுவன்றி யீயத்தைநறுக்கி வெள்ளியதாகவுருக்குவோம் இதுவெல்லாமருமையல்ல வெமதுவித்தைக்கு அமுதமாத்திரமே யருமையென்றவாறு இன்னமிதற்கேயுரையிப்பொருளன்றிய மிதனுள்ளுரையென்னெவென்னிற் சீதேவியிருப்பது பொற்றாமரையாதலால் கஞ்சமாகிய தாமரையைப்பொன்னாக்கினோமென்றூர் இருப்புப்பாடகங்காட்டினரென்பது தாமிருக்குமிருப்பிடந் திருப்பாடகமாகியதலமென்றறிவித்தது இரும்பைபாடகமாக்கினமென்பதுபெரிய பாம்பின்படத்தை யெவருக்குநாடகசாலையாக்கினமென்றது ஈயத்தைநறுக்கி வெள்ளியகாகவுருக்குவோமென்பது ஈயத்தையுறுக்கி யூற்றும்போது வெள்ளியதாயோடு மென்பதுகருத்து. (௬௨)

இதுவுமது-கட்டளைக்கலித்துறை.

அரும்பித்தளையவிழ்நாண்மாலைமாபனரங்கனெங்கள்
பெரும்பித்தளையும்பிறப்பறுத்தாண்டபிரான்சித்தரோம்
தரும்பித்தளையுந்தராவும்பொன்னாக்கித்தருவெமப்பா
திரும்புத்தளையினுநெய்பாலமுதினுஞ்சிந்தனையே

(எ-து) அறும்பானதறும்பி முறுக்கவிழ்ந்து புஷ்பிக்கும் பூமாலையையணிந்த மார்பையுடையவர் அரங்கமாகியநகரையுடையபெரிதாகியபித்தையணைந்து குழம்பும்பிறப்பை யொழித்தாண்டருளியபிரானை அரங்கநாயகனுடைய திருவடிக்கரிதாகியசித்தர்நாம் நீங்கள்தரப்பட்டபித்தளையையுந் தராவையும் பொன்னாக்கித்தருவோம் அப்பாவென் சிந்தையான திப்போ திரும்பிற்று வெண்ணெயிலேயும் நெய்யிலேயும் பாலிலேயும்விருப்பமாய்ப்பொசிக்கவேண்டு மென்றவாறு இதற்கு யின்னமூமொன் றுண்டு தரும்பித்தளையுந்தராவும்பொன்னாக்கியென்பது தரும்பிமறித்து அணைந்துவனையின்மூட்டும் அராபாம்புக்கு அரியென்றுபேர் பொன்னுக்கு மரியென்று பேராகையாலப்பொன்னைப் பொன்னாக்குகின்றேனென்றுசொன்னவாறு ()

நேரிசைவெண்பா.

சிந்திக்கத்தித்திக்குஞ்செவ்வாய்துவர்த்துப்பாம்
புத்திக்குள்ளேயின்புளிமேவும்நந்தம்

கருவரங்கர்கைத்தழலுங்காவிரிநாடே
திருவரங்கத்தேவளருந்தேன்.

(எ-து) காவேரியினிடத்திலே திருவரங்கத்திற்கண்வளராநின் றின்பத்தைச்செய்கின்றமையால் தேனையொத்திருக்கின்ற அரங்கநாயகராகிய தேனையுண்ணவென்று சிந்தையினுற்சிந்திக்குமாத்திலே தானேபிறவஞ்சமாகிய வாழ்க்கையில் மற்றொருபொசிப்புறு விரதிக்கின்ற சிவந்தவாயானது துவர்ப்பாயவிடும் இதயத்திலே யிடைவிடாதஆனந்தமாகிய பேரின்பமுடைத்தாயிருக்குமன்றியும் நம்முடைய கருவரங்கமாகிய கருப்பைக் கைத்துக்கனற்றுநிற்குமென்றவாறு, (௪௪)

கட்டளைக்கலித்துறை,

தேனந்துசோலையரங்கேசர்சேவடிமேல்விசயன்
தானந்தநாளையிற்சாத்தியமாலையுந்தாள்விளக்கும்
வானந்தருங்கங்கை நன்னீருஞ்சென்னியில்வைக்கப்பெற்ற
வானந்தந்தாணல்லவொமுககணன்மன்றுளாடுவதே

(எ-து) வண்டினங்கள்தாவாநின்ற பூங்காவனஞ்சூழ்ந்த அரங்கநாயகருடையதிருவடியில் அருச்சுனனானவன் முற்காலத்திலர்ச்சித்தமாலையும் அடியிணைவிளங்கிய வரனிடத்திலேவருங்கங்கையாகிய நன்னீரையுஞ் சிரசிலேவைககப்பெற்ற ஆனந்தமாகிய மகிழ்ச்சியினாலன்றோ மூன்றுகண்ணினையுடையவன் மன்றினிடத்திலே நடனமாடினதென்றவாறு. (௪௫)

இரங்கல்எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஆடும்படநாகணைமேலணையு
மமலன்கமலத்தவனுஞ்சிவனும்
நாடுந்திருமாறுயில்கோயிலின்வாய்
நறைவார்பொழிலூடுளைவராளக்க
காடுங்குறையைச்சாடுங்குவளைக்
கண்ணுங்குதலைப்பண்ணுங்கரியின்
கோடுந்தரளத்தோடும்புருமக்
கோதண்டமுமேமுதண்டமுமே

(எ-று) எடுத்தாடும்படத்தினையுடைய பாம்பணையிற்பள்ளிகொள்ளும் பரமபுருஷோத்தமரான வருந்திக்கமலத்துதித்தவயனும் அரனும்ராயந்தறிதற்கரிய திருமாலானவர் திருக்கண்வளருந்திருவாங்கத்தினிடத்திலே நறுநாற்றங்கமழும் நந்தவனத்திலேநண்ணுந்தலைவியாருடைய அளகாடவியுங்காதிலணிந்தகுழையையவந்தலைக்குங்குவளைமலரையொத்த கண்ணுங்குதலையாகியபண்ணின்மொழியுமானைக்கொம்பையொத்தழகியகொங்கையுமுத்திலேயமைத்ததோம்புருமாகியவில்லுமாகவேதோன்றுகின்றதுமூதண்டகோளமுழுதும்—எ-று. (௬௬)

கைக்கிளை-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியசந்தவிருத்தம்

அண்டமுழுதுண்டவருமிழ்ந்தவரிடந்தவ
 ரளந்தவர்வளர்ந்தருளுமா
சண்டபணவைந்தலையனந்தசயனந்திகழ்
 தருநதிருவரங்கர்வரைமேல்
கண்டதொருகரும்புபதிரண்டுமகரங்களொரு
 கஞ்சமிருவெஞ்சிலைமணம்
கொண்டதொருகொண்டலிருகெண்டையொரு
 தொண்டையிருகும்பமொருசெம்பணிலமே

(எ.று) அண்டபகிரண்டங்களெல்லாம்போனகமாகவுண்டுமிழ்ந்து மிடந்துமளந்தவர் அதுவன்றியும்நீண்டுவளரும்பெரியகொடிதாகிய தடங்களைப்பொருந்தியவைந்தலையையுடையவனந்ததபணத்திலே திகழ்ந்தருளியதிருவரங்கேசருடைய வரையினிடத்திலேஎன் கண்ணினால் காணத்தக்கவிளங்குஞ்சிகொம்பென்றுண்டு அதிலேயிரண்டுமகரங்களுமொருதாமரையுமிரண்டுவில்லும்மணம்பொருந்தியவொருமேகமும்இரண்டுசேர்க்கண்டையுமொருஆதொண்டைப்பழமும்இரண்டுகுடமும் ஒரு சங்குமுள்ள தென்றவாறு( இன்னங்கேளென்னில்இளஞ்சிக கொம்பிடையாகவும்-மகரகுழைகாதாகவும்-தாமரைமுகமாகவும் வில்-புருவமாகவும்-மேகம அளகமாகவும் மீனம்விழியாகவும் ஆதொண்டைப்பழம்வாயாகவும்-குடங் கொங்கையாகவும்-சங்கங்கழுத்தாகவும்கொண்டுதலைவன் தலைவியை வியந்துரைத்தது (௬௭)

இரங்கல்-தாழிசை

செம்பொன்னரங்கத்தரங்கர் சீதளசந்திரவாவிசூழ்
கம்புளுடன்பயினுரைகாள்காதலையென்சொலியாறுவேன்

வெம்பனிவந்ததுவந்தபின்வேனிலும்வந்ததுவேனில்போய்ப்
பைம்புயல்வந்ததுசென்றனைப்பாதகர்வந்திலர்காணுமே

(எ-து)செம்பொன்னினாற்செய்தவரங்கத்தினிடத்திலேயலைகள்பொருந்தி
யநீரளாவியசீதளசந்திரவாவியாகியசந்திரபுஷ்கரணியைச்சூழப்பட்ட கம்
புகளாகியசம்பங்கோழியுடனே கூட்டத்துயிலாநின்றநாரைகளேயான்கொ
ண்டகாதலையென்னென்றுசொல்லியாற்றிக் கொள்ளப்போறேன் வெவ்வி
தாகியபனிக்காலமும்வந்ததுஇரக்கமின்றிநம்மைவிட்டுப்பிரிந்துபோனபா
தகரின்னம்வந்திலர்காணும்—எ-று. (சஅ)

சம்பிரதம்-பன்னிருசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்

காணாதபுதுமைபலகாட்டுவென்கட்கெவிக
ளெட்டையுமெடுத்தாட்டுவேன்
கடல்பெருகுவென்பெரிய கனகவரையைச்சிறிய
கடுகிலடைத்துவைப்பேன்
வீணாரவாரமூதண்டமுறவிளைவிப்ப
னிரவுபகன்மாறுடுவேன்
விண்ணையுமறைப்பனெழுமண்ணையுமெடுப்பனிவை
விளையாடும்வித்தையென்றால்
நிணைகணைப்பள்ளியிற்றிருவரங்கத்து
நெடிதூழிதுயிலும்பிரான்
நெற்றிக்கணனையானான்முகனைவாசவனை
நிமிருமிருசுடரைமுதலாச்
சேணாடர்யாவரையுமடிமைகொண்டவரவர்
சிறத்திற்பொறித்துவிட்ட
திருச்சக்கரப்பொறியிலாதவொருகடவுளைத்
தேடியினிமுன்விடுவனே.

(எ-து) காணப்படாதவதிசயங்களையெல்லாம்காட்டுவேன் அட்டமாநா
கங்களையு மெடுத்தாட்டுவேன் சத்தசாகரங்களையும் பானம் பண்ணுவேன்
பெரிதாகிய மகமேருகிரியைச்சிறிதாகியகடுகிலேயடைத்து வைப்பேன்வீ
ணாரவாரமாகவூதண்டகோளங்களினுமுண்டாக்குவேன் இரவுபகலாகவும்
பகலிரவாகவுமாறுடுவேன் ஆகாயத்தைமறைப்பேன்ஏழுலகங்களையு மெ

ட்பேன் இதுவெல்லாம்விளையாடும்வித்தையல்லவிண்டநாகணையிற்றிருவ
ரங்கத்திலேநெடிதானவூழிகாலமுமறிதுயிலமர்ந்த வெம்பெருமானுனவர்
நெற்றியிலேகண்ணுண்டான திரிநேத்திரனைத்தேவேந்திரனைச் சதுர்முகப்
பிரமாவைச்சந்திரசூரியர்முதலானவிண்ணுலகி லுள்ளவர்கள் யாவரையும்
அடிமைக்கொண்டு அவரவர்சிரங்களிலேஎழுதிவிட்ட அழகியசக்கரப்பொ
றியில்லாதவராயிருக்கப்பட்டஒருகடவுளைத்தேடிக்கொண்டுவந்து இனிமு
ன்னேவிடுவேனென்றவாறு)என்னவேசக்கரப்பொறியில்லாதகடவுளெவ்
வுலகினுமில்லையாதலாற்றேடி யினிமுன்விடுவேனென்றருமையறிவித்த
தெனக்கொள்க-) (௪௯)

எண்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்

முன்னமேழ்புரவியானிரவிகாய்வெயிலினால்
  முத்தரும்பியகாலமுழுமதித்திருமுகத்
தன்னமேயின்னமோர்காவதம்போதுமேல்
  அகலுமிப்பாலையப்பாலவணைக்காவதம்
என்னையாளுடையவன்றுயிலராவமளியும்
  இலகுபொற்கோயிலுமிந்துவின்பொய்கையும்
புன்னைவாய்கிழலும்புரிசையும்மதுகரப்
  பூவிரித்துறையுமக்காவிரித்துறையுமே

(எ-து) முன்னமேஏழுகுதிரைகட்டப்பட்ட இரதமுடைய இரவியால்
எரிக்கப்பட்டவெய்யிலினாலே வேர்வையாகியமுத்தரும்பியபூரண சந்திரோ
தயம்போன்ற அழகியமுகத்தினையுடையஅன்னத்தையொத்தநடையினை
யுடையவளேஇப்போதுகாமிங்ஙனமின்றுநடந்துபோகுதற்கு முன்னம்
இன்னம்ஒருகாதவழிநடக்தளவில் அங்ஙனமழற்றுகின்றபாலை வனமுண்
டு அந்தபாலைவனத்துக்குமப்பால்அணைக்காவதமுண்டு அவடத்திலேயென்
னையாளாகவுடையவருட்கண்வளராநின்றவனந்தனெனியவமளியும் விளங்க
ப்பட்டஅழகின்மிக்கதிருவரங்கமும்சந்திரபுஷ்கரணியும்புன்னைகவிருட்ச
நிழலுஞ்சத்தப்பிரகாரமும்வண்டுகள்படியப்பட்டபுஷ்பங்கள்மாராநின்ற
பூக்காவனமும்அழகியகாவெரிதீர்த்தமும்காணக்கடவோம் அவ்வளவும்வி
மனத்தளராமல்வரவேண்டும்—எ-று. (௫௰)

கட்டளைக்கலித்துறை

துறைமதியாமலிக்கான்யாறுநீந்திச்சுரங்கடத்தல்
நிறைமதியாளர்க்கொழுக்கமன்றுநெடுமாலரங்கத்
திறைமதியாவருமாராவமிர்தன்னவிந்நுதற்-
குறைமதியாள்பொருட்டாற்கங்குல்வாரலெங்கொற்றவனே

(எ-து) இதுவழங்குந்துறைஇதுவழங்காத்துறையென்றுமதியாமற்பெரியகான்யாற்றைநீந்தியரிய வழியைக்கடக்கின்றமையுன்னைப்போலநிறைந்தவறிவுடையாளர்க்கொழுக்கமுடைமையன்று நெடுமாலாகிய திருவரங்கத்திலுறையப்பட்ட எம்பெருமானனவர்முன்னேசமுத்திரந் தானம்பண்ணவந்துநிறைந்தவமுதத்தையொத்த இந்தக்குறைமதியாகிய பிறையையொத்த நெற்றியையுடையவள்பொருட்டாயிவ்விருளின்கண்வாராதொழிவாயாக வெம்முடையதலைவனே—எ-று. (௫௧)

மறம்-எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

கொற்றவன்றன்றிருமுகத்தைக்கொணர்ந்ததூத
குறையுடலுக்கோமறவர்கொம்பைக்கேட்டாய்
அற்றவர்சேர்திருவரங்கம்பெருமாடோழன்
அவதரித்ததிருக்குலமென்றறியாப்போதும்
மற்றதுதான்றிருமுருகமேயானாலங்க
வாய்செவிகண்மூக்கெங்கேமன்னர்மன்னன்
பெற்றவளவரசானலாலின்கொம்பைப்
பிறந்துகுலத்துக்கேற்கப்பேசுவாயே

(எ-து) கொற்றவனாகியவேந்தனுடையதிருமுகத்தைக்கொண்டுவந்ததூதனே இந்தச்சிரமிழந்தமுண்டமாகியங்ஙனந் தனித்துக்கிடந்த குறையுடலுக்கோமறவராகியவேடர்பெற்றவஞ்சிக்கொம்பையொத்தஎங்கள் பெண்ணைக்கேட்டாய்ஆசாபாசங்களையுந்தவறியதபோதனர்களானுகப்பட்டதிருவரங்கப்பெருமான்றோழனானகுகனானவேடன்திருவவதாரஞ்செய்த திருக்குலமென்றறிந்ததில்லையோ நீ கொண்டுவந்தது திருமுகமேயானால்மற்றுமிதனுடைய வுறுப்பாகியமெய்-வாய்-கண்- மூக்குச் . செவியாண்டெங்கே போய்விட்டதுமன்னர்மன்னவனானவன் பிறந்தகுலமாசனு லதற்கினமாகி

ய ஆலின்கொம்பைப்பிறந்தகுலத்துக்கியற்கையாகப்பேசிப்பெண்கேட்பா யென்றவாறு. (௫௨)

இதுவும்-அது-எழுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

பேசவந்ததூதசெல்லெரித்தவோலைசொல்லுமோ
  பெருவரங்களருளரங்கர்பின்னைகோன்வர்தாளிலே
பாசம்வைத்தமறவர்பெண்ணைநேசம்வைத்துமுன்னமே
  பட்டமன்னர்பட்டதெமகள்பதிபுகுந்துபாராட
வாசலுக்கிடும்படல் கவித்துவந்தகவிகைமா
  மகுடகோடிதினையளக்கவைத்தகாலுநாழியும்
வீசுசாமரமரங்குடிற்றெருங்கிறத்தகற்றைறசுற்றிலும்
  வேலியிட்டதவர்களிட்டவில்லும்வாளும்வேலுமே

(எ-து) பெண்பேசுதற்குவந்ததூதனே கேழ்ப்பாயாகக் கரையான்ரித்து ணைஞ்செருகுசெல்லுமோ பெரியவரஙகளை அடியார்களுக் களிக்கவல்ல அரங்கநாயகராகிய இலக்குமிகாந்தருடைய திருவடிகள்வேயாதரவானம றவர்பெற்றபெண்ணைவேண்டிநேசம்வைப்பதற்குமுன்னமே பட்டவர்த்த னராகியஇராசாதிராசாக்கள்பட்டபாடுகளைஎங்கள்பதியிலேபுகுந்து பார டாளங்கள்வாசலுக்குமூடும்படல்களாகஅவர்கவித்துவந்த குடைகளைச்செ ய்தோம்அதுவுமன்எங்களுக்குத்தினையளக்கமரக்காலும் நாழியுமாகவவர்க ளணியப்பட்டபெருமைபெற்றுகிரீடங்களைச்செய்தோம் அதுவுமன்றியெ ங்கள்குடிசைக்குவிழற்கற்றையாகவவர்களுக்கு வீசிவந்த வெண்சா மரைக ளைச்செய்தோம்அதுவுமன்றியெங்கள்தோட்டத்துக்குச்சுற்றிலும்வேலியா கஅவர்கள்தொடுக்கப்பட்டவில்லும்வாளும்வேலும்மற்றுமுள்ள ஆயுதங்க ளைச்செய்தோமென்றவாறு, (௫௩)

மடக்கு-நேரிசைவெண்பா.

வேலையுலகிற்பிறக்கும் வேலையொழிந்தோமில்லை
மாலையரங்கேசனைமாலையினுங்-காலையினும்
உன்னினேந்தோமில்லையுடலெடுத்தவன்றுமுதல்
என்னினைந்தோநெஞ்சேயிருந்து

(எ-து) வாராய்மனமே வேலையாகிய சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்தி லே இறத்தலும் பிறத்தலுமாகிய வேலையையொழிந்த நாமல்லா மிலான

அரங்கநாயகனைக் காலையும் மாலையுங்கருதிக்கருத்துருகி நைந்தநாமுமல்ல ஆதலாலிந்தச்சென்னமெடுத்தநாள்முதலென்ன கருமத்தைக் குறித்திருந் தோம்—எ-று (ருச)

மடக்கு-கலித்தலைத் துறை.

இருபுவனம்விரும்புவனமணியரங்காபணியரங்க
ரிமயநண்ப
வருங்கொடியின்மருங்கொடியின்மனங்குழைக்கும்-கனங்குழைக்கு
மனங்கன்சாபக்
கரும்புவரும்பொரும்புவருமுத்தநகை
கார்தள்பூந்தேன்
மருங்குழலுங்கருங்குழலுமுருகுவலையிருகுவளை
மழைக்கண்டாமே

(எ-று) பெரிதாகியபுவனமுழுவதும் போனகமாகவிரும்பிய துளப மாலையணிந்தவரங்கநாயகர்பாம்பைத்தானேபள்ளிகொள்ளுமி மாகக்கொண்டவருடைய இமையாகியவரையினிடத்திற்பாங்கனேவராநின்ற பூங்கொடியையொத்தவளுடையயிடையானதுவொன்றுமேயென்னுடைய வொழிவில்லாதமனதைக்குழைக்குமானுல்மற்றுங்கனத்தகுழையை யுடையாளுக்குள்ள அவையவமானகாமனுடையவில்லாகிய கரும்பினதுருவையொத்துப் பொருத்தப்பட்ட புருவமும் முத்தினதொளியையொத்தமூரலும் காந்தட்பூவின் மொய்க்கும் வண்டினங்கள்பக்கத்தேயழலாநின்ற கரியகூந்தலும்நறுநாற்றம்வனைந்தஇரண்டுகுவளையுங் குவளைமலரை யொத்தகுளிர்ச்சியையுடையகண்ணுமானவித்தனையும்வேண்டுமோவென்று தலையழிக்க யிடையொன்றுமழையுமென்றவாறு. (ருரு)

பதினான்குசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

இதனுள் - கேசாதிபாதவரை - கூஉ - அவயவங்களும்

அவற்றின்உவமானங்களோடுகொண்க

மழைபிறைசிலைவேல்வள்ளை யெள்ளிலவின்
மலர்முல்லைமதிவளை கழையாழ்
வாரிசங்கெளிறுதத்தைவாய்கலசம்
மணிவடபத்திரமெறுபூர்

அழகுநீர்த்தரங்கந்துடிசுழியாவம்
அரம்பைஞெண்டிளவரலாமை
அணிதராசிணைகந்துகந்துசிரதாளம்
அம்புயமரங்கநாடணையார்
குழைநுதல்புருவம்விலோசனங்காது
நாசிவாய்நகைமுகங்கண்டங்
குலவுதோண்முன்கையங்கைமேல்விரல்கள்
கூருகிர்கொங்கைக்கண்வயிறு
விழைதருமுரோமம்வளையிடையுந்தி
விரும்புமல்குல்தொடைமுழந்தாள்
மிளிர்கணைக்கால்கள்புறவடிபரடு
மென்குதிவிரனகந்தாளே

(எ-து) அரங்கமாகிய நாட்டின்தொழிலையொத்தமங்கைமாருடைய அவயவங்களாகிய அளகமும்நெற்றியும்புருவமும்கண்ணும் காதும் நாசியும் வாயும்நகையும்முகமும்கழுத்தும்குலவப்பட்டதோளும் முன்கையும் உள்ளங்கையும்மெல்லியவிரல்களும்கூரியநகங்களும்கொங்கைகளும் வயிறும் விழையப்பட்டரோமவொழுங்கும்வயிற்றின்வளையும் இடையுமுந்தியும்விரும்பப்பட்டஅல்குலுந்தொடையுமுழந்தாளுமிளிராநின்ற கணைக்காலும் புறங்காலும்பரடும்மேன்மையாகியகுதிக்காலும்விரலும்நகமும்உள்ளங்காலுமாகியஇவ்வவயங்களெல்லாம் எவைவையெவகொக்குமென்றால் முகிலையும்பிறையையும்யாழையும்தாமரையும்களிறுகியமீனையும் கிள்ளைவாயையும் கலசங்களையும்மணியையுஞ்செறிந்தஆலிலையையும்எறும்பூர்தலி னொழுங்கையும்அழகியநீர்த்தரங்கத்தையும்துடியையும் பாம்பையும் கதலியையும் ஞெண்டையும்இளவராலிணையும் ஆமையையும் அழகியதராசிணையும் பந்தையும்பவழத்தையும்முத்தையும் அம்புயத்தையுமொக்குமென்றவாறு (எங்ஙனேயெனில்அளகபாரத்துக்குமழைமேகமும்நெற்றிக்குப்பிறையும் புருவத்துக்குவில்லும்கண்ணுக்குவேலும்காதுக்குவள்ளையும்நாசிக்குஎள்ளின்பூவும்வாய்க்குஇலவின்பூவும்நகைக்குமுல்லையும்முகத்துக்குமதியும்கழுத்துக்குச்சங்கும் தோளுக்குமூங்கிலும்முன்கைக்குயாழும்உள்ளங்கைக்குத்தாமரையும் விரல்களுக்குக்கெளிற்றுமீனும் நகங்களுக்குக் கிளிமூக்கும் கொங்குக்கலசமும் வயிறுக்கு ஆலிலையும் அவ்வயிற்றுள்ளவுரோமவொழு

ங்குக்கெறும்பூதலும்புருவம்அவ்வயிற்றிலுள்ளவனாக்கும் நீர்த்தரங்கமும் இடைக்குத்துடியும்புறட்டுக்கு தாளசு குதிக்காலுக்குப்பந்தும்விரலுக்கு ப்பவழமும் நந்தத்துக்குமுத்தும்உள்ளங்காலுக்குத்தாமரையையும்இவ்வகையுவமானங்கண்டுகொள்க.

கைக்கிளை-மருட்பா.

தாளிரண்டும்பாவென்றுந்தார்வாடும்வேர்வாடும்
வாளிரண்டுங்காதிரண்டில் வந்திமைக்கும்-கோளிரண்டும்
ஐவகைப்பூதமமைத்தருளரங்கர்மைவளர்சோலைமலையில்
தெய்வமல்லளித்திருவுருவினளே

(எ-று)இரண்டுகாலும்பூமியிலேபொருந்லுதலினாலும் மாலை வாடுதலினாலும் வேர்வையாடுதலினாலும்வாளையொத்த இருவிழியும் இரு செவியினிடத்தில்வந்து வந்திமைத்தலினாலுங் கோளிரண்டாகியவிராகுக் கோள் கேதுக்கோள்முதலாகிய கிரகங்களும்பஞ்சபூதங்களையும் படைத்தருளிய வரங்கநாயகருடையமைமேகந்தவழுஞ் சோலைமலையிலுள்ள தெய்வமாகிய அணங்கல்லஇவ்வழகியவடிவையுடையவள் பூதலமாதராக வேண்டுமென் றுதலைவனறிந்துரைத்ததென்றவாறு (௫௯)

ஊசல்-எண்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

உருமாறிப்பலபிறப்பும்பிறந்தும்செத்தும்
ஊசலாடுவதடியேனொழியும்வண்ணம்
கருமாயத்தென்னெஞ்சைம்பலகையாக்கிக்
கருணையெனும்பாசத்தைக்கயிறுப்பூட்டி
மருமாலைத்துவளசியவாடிரூசல்
மணிமகரக்குழையசையவாடிரூசல்
திருமாதுபுவிமாதோடாடிரூசல்
திருவரங்கராஜரேயாடிரூசல்

(எ-து)உருவமானது மாறிமாறிப் பலபலபிறவியாகிய யோனிதோறும் பிறந்துமிறந்துமூசலாடுதலையடியேனொழித்துவிடும்படிக்குக்கருமையாய் மாயையோடுங்கூடினயென்னெஞ்சைப்பலகையாகச்செய்துதேவரீருடை

யகருணையாகியபாசத்தைக்கயிராகப்பூட்டி நறுநாற்றுமிக்க துளவமாலைய சையஆடக்கடவீர் இவ்வூசலைமணிமகரக்குண்டலங்களசையஆடக்கடவீர் இவ்வூசலைச்சீதேவிபூதேவியோடுவாடக்கடவீர்இவ்வூசலைத் திருவரங்காசனே யாடக்கடவீர்இவ்வூசலையென்றவாறு. (௩அ)

கலித்திலைவண்ணத்துறை.

ஊசல்வடம்போலூர்கடம்போலொழியாமே
நாசவுடம்போடாவிசுழன்றேநலிவேனே
வாசவனும்போதாசனனுங்கூர்மழுவோனும்
நேசமுடன்சூழ்கோயிலரங்காநெடியோனே.

(எ-து)ஓடியோடிவருவளவும் போவனவமான சற்கயிறுபோலு மூரப்பட்டசகடக்காற்போலுமோயவில்லாமல்அனந்தஞ்செனனங்கடோறு மெடுத்தெடுத்துநசிக்கப்பட்டவுடம்பினுடனேகூடஆவியானதுசுழன்றுநலியக்கடவேனோ வாசனாகியஇந்திரனும்போதாசனாகியபிரமதேவனும் கூரியமழுவாயுதத்தையுடையவுருத்திரனும்நேசமுடனேசூழ்ந்து துதிக்குங்கோயிலாகியஅரங்கத்தையுடையவனேநெடியமாலானவனேயென்றவாறு. ()

தழை-கட்டளைக்கலித்துறை.

நேசத்தழைக்குமதயானைமுன்புநின்றோனரங்கம்
பேசத்தழைக்குமென்னன்பனையாய்பெருங்கற்பகத்தின்
வாசத்தழைக்குறுந்தழைநாணிதுமந்தத்தென்றல்
வீசத்தழைக்குந்தழைபோற்கெடாவிலையில்லையே

(எ-து) அன்பினாலேஆதிமூலமென்றழைத்த மதயானைமுன்னேவந்து காத்தவருடையதிருவரங்கத்தைப்பேசுந்தோறுஞ் பேசுந்தோறுஞ் செழித்துத்தழைக்கப்பட்டவெனதுடையநண்பையொத்தவனேபெரிய கற்பகவிருட்சதினுடைய மணம்பொருந்தியதழையைவிட இதுநறுநாற்றமிக்கத்தழைகாணுதலால்மந்தமாருதம்வீசத்தழைக்கும்மறமுள்ள விருட்சத்தின்தழையைப்போலக்கெடாதுஅதுவுமன்றிஇதற்குவிலையு மிவ்வளவென்று மதிப்பில்லையென்றவாறு. (௩௯)

எண்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்

விலையான திலையென் றுநீதந்தமுத்தம்
வெய்தந்தமுத்தாகில்வெற்பாவியப்பால்
இலையார்புறைபள்ளிநாராயணன்பால்
எந்தாயரங்காவிரங்காயெனபபொய்த்
தலையாவிரதரும்பனிப்பாய்சுமக்கும்
தன்றாதையவர்தாமரைத்தாளவிளக்கும்
அலையாறு சூடும்புராணங்கள்பாடும்
ஆடுமபொடிப்பூசியானந்தமாயே

(எ-து)நாயகனேசொல்லுவாயாக இதற்கு விலை யிடப்படாதென்று நீ கொடுத்தமுத்தான துவே யின்றமுததேயாகில்அதுயிலைபடர்ந்தபுனலிலே துயிலிடங்கொண்டருளிய ஸ்ரீமந்நாராயணனிடத்திலேபோ யெனக்குத் தாயானவனே அரங்கனே இரங்கவேணுமென்று காலத்தைக் கையிலேந்தி யிரகதும்பாம்பாகியபாயலைச்சுமக்குந்தன்தாதையாகிய பிரம தேவனுனவன் அவருடைய பாததாமரையைவிளக்கப்பட்ட அலையாறாகிய கங்கையை த்தரிக்குமபுராணங்களை யெல்லாமபுகலும்பொடியாகிய நீறைப் பூசிக்கொண்டு ஆனந்தமாகின்றாடவும ஆடுமெய்ததன்மையொன்று மின்மையால் அம்முத்தமனறென்றவாறு இதின்கருத்துவேலானமுத்த மென்பது யீசுனுகையாலவர் ஸ்ரீவிஷ்ணுவினிடத்திலெசெய்தமையைவ்நேரதமாக விரிததாறென்றறிக) (௬௧)

தவம்-கட்டளைக் கலித்துறை.

ஆனந்தமாயங்கர்க்கேயுயிர்க ளடிமையென்னும்
ஞானகதனலம்பொறி வாசல்சாத்திநற்றூளைபபற்றி
ஈனந்தரு பறறுமற்றென் றும்யானெனதென் றுமசி
மானகதவிர்கதிருப்பார்க்கிதுபோலிலைமாதவமே

(எ-து)ஆனந்தமாகியபேரின்பத்திலமூந்தியரங்கனுக்கே உயிர்களாகிய ஆன்மாக்கள் அடிமையென்றறியத்தக்க ஞானமாகியகபாடத்தினுலே ஐம்பொறியாகியமெய்.வாய்-கண்-மூக்குச்-செவியென்னும்வாயல்களையடைத்துநன்மைநல்கும நளினமாகிய தாளைப்பிடித்திட்டு வினத்தைத் தராநின்ற ஆசரபாசமானபற்றேதுமிலாறியானெனதென்னுஞ்செருக்குமுதலாகிய மானுபிமானங்களைத் தவிர்த்திருக்கத்தக்கவர்களுக்கிதைபபோலொத்த உபியா தொன்றும இல்லையென்றவாறு. (௬௨)

எ

ROJA MUTHIAH
KOTTAIYUR-623 106
TAMILNADU · INDIA

இதுவும் அதுஎண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மாதவங்களென்றோ சவங்களில்மருவுசிவனென்றொருவநீபெரும்
பூதமல்லையிந்திரியமல்லையைம்புலனுமல்லைநற்புந்தியல்லைகாண்
சீதரன்பரந்தாமன்வாமனன் திருவரங்கனுக்கடிமைநீமைபுனக்
கேதுமில்லையென்றறியந்தபின்றதின்மாதவமில்லையெனுருமே

(எ-து) பெருமைமிக்கதவங்களென்றுசொல்லப்பட்ட அவங்களிலே சிவனென்றுமருவப்பட்ட ஒருவனேகேளாய்மேவுதற்குநீவந்து பஞ்சபூதமுமல்லபஞ்சேந்திரியமுமல்லஐம்புலனுமல்ல அதுவுமன்றி இடபுந்தியு மல்லவே காணுகையால்சீதரனென்றும்வாமனனென்றும்சிறந்த திருவரங்கேசனுக்கே அடிமையானேனென்எனக்கேதொருகுற்றமில்லையென்றறி இப்படியறிந்தாயாகிற் பின்பு இதைவிடமாதவமானதேதொன்றுமில்லையென்றவாறு

இரஙகல்-கட்டளைக்கலித்துறை.

எங்காந்தலஙகை நல்லீரொன்செய்தே னிரண்டேந்திழையார்
தங்காந்தனென்றறிந்தாலுமில்லாது தனைக்குநெய்க்கும்
அங்கந்தசெம்பவளத்தெம்பிரானரங்கள்புயங்கள்
செஙகாந்தமால்வரையோ விரும்போவென்றன்சிந்தனையே

(எ-து) உம்முடையகாந்தாளாகிய அங்கையையுடைய நங்கைமீர்களே கேளீர்யனென்னசெய்யப்போறேன் யேந்திழையாராகிய ஆவரணஙகளுடையசிதேவிகளுமபூதேவிக்குங்கணவனென்றறிந்தேனுமினும்என்சிந்தையானதுதரித்துநிற்பதில்லைதளையையுண்பதற்கும் நெய்யைக்குடிப்பதற்கும் அண்ணாதசெம்பவழம்போன்ற இருவாய்மலரையுடைய எம்பிரானாகிய அரங்கநாயகருடையதிருப்புயங்கள் செவ்விதாயுன்னிதமாகிய காந்தக்கல்மலையோஎன்னிதயமான இரும்புவோமென்றவாறு இன்னமு காந்தத்துக்கு இரும்பிற்கும் கண்டளவேகலப்பது காரணமாதலால்செங்காந்தமால்வரையோஇரும்போவெந்தன்சிந்தனையே யென்றுவொன்பது (௬௪)

களி-தாழிசை

சிந்தையிற்குடிகொண்டிருந்து திருக்கருத்தடிமைக்கொள்ளும்
திருவரஙகர்பொருப்புயர்ந்த திருப்புயப்புகழ்களியசோம்
புந்திமிக்கதுவந்துபுக்கதுபோதமாதர்களெழுவர்தம்
பூசையேமகபூசையென்றதுபு துமையன்றிதுபுத்தார்காள்

அந்தரத்திமையோரருந்துமருந்தும் வெள்ளையதன்றியே
அரியசாதிகொளாதமானிடரகலிடத்தினுமில்லையே
மந்திரத்தினிலாததேவதை வானகத்தினிலில்லையே
வடிவிலாதனவையண்ட கோளம்வளைந்தவைப்பினுமில்லையே

(எ-று) பத்தர்களேவாருங்கள்-புகலக்கேளீர்- சிந்திப்பவருடைய சிந்தையிலே-குடியாய்-விட்டுநீங்காமலிருந்து-இருககரமாகிய அஞ்ஞானத்தையறுததாட்கொண்டருளாகின்ற திருவரங்கேசருடையவனாயிலு முயர்ந்தபுயங்களைப்புகழ்ந்துகொண்டோம் களிப்பையுடைய களியாநாங்கள் மனதுக்கிதமிருந்த மகிழ்வான துவந்துவாய்த்தது அதேதென்றால் சத்த மாதர்களுடையவாம்பூசையேபெரிதாகியபூசையென்பது-அதுசுவனமாய் நடக்கின்றதல்லஅதெப்படியென்னில் விண்ணுலகிலுள்ளவிண்ணவரும்போசிக்கப்பட்டஅமுதமும்வெள்ளைதான்-அதுவுமன்றி அரிதாகிய சாதிகொள்ளாத மானிடர்அகண்ட பூமியினிடத்திலேயில்லை-அதுவுமன்றிப்பெருசுமமிக்க மந்திரத்தில்வசப்படாததெய்வங்கள் வானுலகத்திலுமில்லை அதுவுமன்றியொருவடிவில்லாதவஸ்து இந்தஅண்டகோளம்வளர்ந்தவைப்பிலேயு மில்லைஎன்றவாறு இதன்கருத்துதேவராமுதம்-அதுவும்நிறமொன்றாகையால்வெள்ளையென்றார்-சாதியென்பதுகள்ளாகையாற்களுக்குடியாதவருலகத்திலில்லையென்றார்-மந்திரமென்பதும துவாகலால்-மதுவில்மகிழாததெய்வம்வானிலுமில்லையென்றார்வடிவென்பதும துவாதலால்- மதுவில்லாதவஸ்து அண்டகோளவைப்பினுமில்லை யென்றவாறு - இதனுள்ளுணாகண்டுகொள்க. (௯௫)

குறளடிவஞ்சிப்பா - இவைமுத்தொன்பதும் வஞ்சி அடிகள்.

இல்லறமெனத் துறவறமெனச்-சொல்லறம்பிறதுணையன்றெனப்
பவக்கடலுட்டுவக்கறுப்பான்-காவிரியிடைப்பூவிரிபொழில்

சிலமந்திகள்சினைதாவப்-பலதெங்கின்பழக்குலையுதிர
அடர்கமுகின்மிடறொடிதரத் தேமாங்கனிசிதறுபூவிழ

முடப்பலவின்குடக்கனியுக-அரம்பைக்கனிவரம்பிற்புக
வயன்மருங்கின்மலர்ப்பொய்கையுள் - துயில்வலம்புரிதுண்ணெனவுறக்கா

அட்டாமணைத்தவிசுறைதரு-கூஉட்டோதிமம்பேடட்டுறை
மனிற்சேவன்மனக்களிப்பக்-குயிற்பேடைக்குலமொழிப்ப

மழைமுகிலெனமுழவதிர் தரு-திருவரங்கப்பெருநகருள்
அரவணைமிசையறிதுயிலமர்-தருள்புரி இதுதனிச்சொல்)

இது ஈரடிநேரிசைஆசிரியச்சுரிதகம்

திருநாரணனைச் சேர்ந்தனம்
சரணாரவிந்தஞ்சமென்றிரந்தே

(எ-து இல்லறமென்றுந் துறவறமென்றுஞ் சொல்லத்தக்க அறமுதலானதெல்லாந் துணையல்லவென்றுபிறவிக்கடலினது வந்தனையை யழிக்கும் பொருட்டாய்க் காவேரியினிடத்தில் பூசிரிக்கப்பூங்காவிற்சில தரங்கங்கள்கிளைகளாற்றுவும்போது பலபலதென்னம் பழக்குலைகளுதிரவும்-நெருங்கின் கமுகமரங்களின்மிடறுகளொடியவும் இனியதேமாங்கனிகளுடனேசிதறிய பூமலர்கள்விழவும் முடம்படவளர்ந்தபலாமரத்தினுடைய குடம்போன்ற கனிகளுதிரவும்வாழைக்கனிகள்வரம்பிலேபுகவும் வயலினது மருங்கின்மலர்ப்பொய்கைகளுள்ளே துயிலப்பட்டவலம்புரிசங்கமான துதிடுக்கிட்டதிரவுந்தாளையுடையதாமரைத்தனிசிலேயுறையப்பட்ட குட்டினையுடைய அன்னமானது பெட்டையன்னத்துடனே யெழுந்திருக்கவும்-மயிற்சேவல்மனைக்களிப்பவும் மயிற்பேடைக்குலமொளிப்பவும்-மழை மேகம்போலே முழவதிரப்பட்ட திருவரங்கமாகியபெரியநகரியினிடத்திலேயரவணைமேலே யோகநித்திரையமர்ந்தருளியவழகியநாராயணனைச் சேர்ந்தனங்காண்-அவருடையசரணாம்புயத்தையேதஞ்சமென்றறிந்தென்றவாறு. (௬௬)

மடக்குளஎழுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

இரவியையிரவின் மதியினைமதியுள்
இறையினையிறையுமெண்ணரிய
கரவனைக்காவின் முனிவனைமுனிவர்
கருத்தனைகருத்தனைத் துடைத்தான்
பரமனைப்பரம பதத்தனைப்பதத்துற
பாரனைப் பாரணத்துறும்
அரவனையரவு ணரங்கனையரங்கத்
தடிகளை யடிகள்சேவியுமே

(எ-து) இரவானவனை-இரவினிலியங்கு மதியானவனை- மதிக்குரூறை யப்பட்ட - இறைவனானவனை - இறையுமென்னுநற் கரியகரவானவனைக் கருவைக்துடைசது ஆவப்பட்ட - பரமனானவனை பரமபதமாயுள்ளவனை ப் பதத்துளடங்கப்பட்ட பாரையுடையவனைப் பாரெல்லாம் பரவிப்புகழ ப்பட்ட வோசையாகிய வரவத்தையுடையவனைக்கண்டு அவர்திருவடிக ளைச் சேவியுங்களென்றவாறு (அடிகள்சேயுமென்றது மகாத்துமாக்களே சேவியுங்களென்றுமாம்) (௬எ)

அருபனிக்காலம்-கலிநிலைத்துறை.

சேவிக்குவாழ்விக்கு மெங்கோனரங்கன் றிருக்கோயில்சூழ்
காவிற்கலந்தாசை தந்தேனுகினர்நெஞ்சு கன்னெஞ்சமோ
வாவிப்புறத்தன்ன மேதோவரக் கண்டிலேன்
பாவிக்கனேகந் தனிககாலமிந்தப் பனிக்காலமே

(எ-து) கண்ணீனற்கண்டு சேவிக்கப்பெறில் வாழ்விக்கு மெமக்கிறை வனுகிய அரங்கநாயகனுடைய வழகியகோயிலைச் சூழ்ந்தகரவில் கூடிக்க லந்திருந்து கனவிலும்பிரியேனென்று காதலைக்கொடுத்துப் போனகாத லர் நெஞ்சமானது கன்னெஞ்சுதானுயிருந்ததோ தடாகத்தின் பக்கத்தே சஞ்சரிக்காநின்ற அன்னங்கா ளிந்நேரவனாக்கு மேதுகாரணமாகவோ வ ரக்காண்கிலேன் பாவிபெனக்கு இந்தப்பனிக்காலம் பின்னிடுகிறது அ நேகக்கோடிகாலந் தனித்திருந்து தள்ளுதற்கரிய நெடுங்காலமாயிற் றெ ன்றவாறு. (௬அ)

குறம் அறுசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்.

காலமுணர்ந்தகுறத்தினன் கருதினையொன்றதுசொல்லுவேன்
பாலகனுச்சியிலெண்ணெய்வார் பழகியதோர்கலைகொண்டுவா
கோலமலர்க்கையின்மங்கைநின் கொங்கைமுகக்குறிநன்றுகாண்
ஞாலமுழவந்திடநாளையே நண்ணுவரம்பெருமாளையே

(எ-து) நான் திரிகாலவர்த்தமானமுந் தெரிந்தகுறத்திகாண் வாரும் பெண்ணே நீநெஞ்சிலேயொன்று நினைத்தாய் அதைநிசமாய்ச்சொல்லுகி றேன் என்னுடையபாலகனுச்சிக்கு எண்ணெய்வாரும் பழமையாகிய வு டையுத்தரிய முண்டாகிற் கொண்டுவாரும் அழகியமலரால்நிறைத்த அண

கபாறத்தையுடைய மங்கையே யென்னுடைய கொங்கையின் முகக்குறி நன்மையாயிருந்ததுகாண் அதனாலிந்த ஞாலமுழுதும் உவப்பெய்தும்படிக்கு நாளைத்தானே யணைபக்கடவை நம்பெருமாளை யென்றவாறு(௬௯)

மேகவிடுதூது-கட்டளைக்கலித்துறை.

பெருமலையார்க்குறைப்பே னுமக்கேவிண்டுபேசினல்லால்
கருமாலையாயெழுங் கார்க்குலங்காடொண்டர்காற்பொடிதன்
திருமாலைகொண்ட திருமாலரங்கர்தந்தெய்வத்துழாய்
மருமாலைவாங்கிவம் மின்னந்திமாலை வருமுன்னமே,

(எ-து) நான்கொண்டபேராசையை கரியவொளிங்கா யெழாநின்ற கார்குலங்காள் உங்களுக்கே வாய்விட்டுரைப்பதல்லாமல் உங்களையன்றி யார்க்குரைக்கப்போகிறேன் தொண்டரடிப்பொடியாழ்வார் சொல்லியருளிய திருமாலையைக்கொண்டருளிய திருமாலாகிற அரங்கருடைய திவ்வியமாகிய மணம்பொருந்திய திருத்துழாய்மாலையை வாங்கிவாருங்கள் அந்திமாலையானது வருகிறதற்குமுன்னமே யென்றவாறு. (௭௰)

நேரிசைவெண்பா-

முன்னம்பிறந்த பிறப்போமுடிவில்லை
இன்னம்பிறப்பிக்க வொண்ணாதே - தென்னரங்கம்
மேவிக்கிடந்தானே வீற்றிருக்குநின்பதத்தென்
ஆவிக்கிடந்தா னருள்.

(எ-று) அடியேன் முன்னேபிறந்த பிறப்பிற்கு இவ்வளவென்றோரீ துமுடிவில்லை ஆகையாலின்னமும் பிறந்திறக்கும்படிக்கு உமது திருவுளத்தி லெண்ணவேண்டாம் திருவரங்கத்திலே சேஷசயனத்தில் திருக்கண்வளர்ந்தருள்பவனே யுனதுபாததாமரை நிழலையடைந்து வீற்றிருக்கும்படிக் கெனது ஆவிக்கு யிடந்தருள்வீராகவேணு மென்றவாறு. (௭௧)

இரங்கல்மடக்கு-அறுசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்.

அரும்புன்னைத் தடங்காவே அவாவென்னைத் தடங்காவே
அம்பொருகைக்கண் பொருந்தேனே அழுங்கிருக்கண் பொருந்தேனே

பாம்புங்காலூர்நாவாயே பாவிக்கடலூர்நாவாயே
பார்மீதுயரமறியலையே படுமென்றுயரமறியலையே

கருங்கட்கயலேமாசுறவே கறைவேற்கயலேமாசுறவே
கண்டற்போதுகுவாலுகமே கங்குற்போதுகுவாலுகமே

குருகுபைத்தழைக்குங்கரும்பனையே குயில்மந்தழைக்குங்கரும்பனையே-குறுகீர்ந்தமரங்கனையேகொணர்ந்தமரங்கனையே

(எ-து) அரிதாகிய விசாலமாகிய புன்னைவனமே யான்கொண்ட ஆசையானது என்னிதயத்தி லடங்குதில்லை தாமரையினிடத்திலே பொருந்தினவண்டே யானழுகநீராறு தொழுகையினாற் கண்ணுறகக் கொள்ளவில்லையே பரவியகடலிலே யோடாநின்றமரக்கலமே பாவியெனுக்கு நாவும் வாயுமலர்நாற்றுகின்றது தீயினாற்சுடுந்தன்மையாகு பூமிமீதுயர்ந்துவிழாநின்ற அலையே யான்படுந் துயரங்கண்டறியவில்லையே கருமையாகிய கண்ணையுடையகயலே பெரியசுறாவே களைந்துருகப்பட்ட வெனக்கு அயலாரோ டொத்திருந்தார்கள் மசானவரவி எருந்தாழம்பூவுராநின்ற வெண்மணற் குன்றேகளகுவாகியவோர் பொழுதுசெல்வது அனேகயுகராசி செல்வதொன்னும் படிக்காகின்றது குரும்பையானது தழைக்காநின்ற கரியபனையே கோகிலமானது கரும்பனாகிய காமவேளைவரக்கூவுது ஆகையால் குருகாகியபட்சிகள் சங்குகளமப்பட்ட அழகியக்னையே நம்முடைய வரங்கநாயகனைக்கொண்டு வருவீராகவேண்டு மென்றவாறு, (எ௨)

இதனுள் பத்துத்தாமரைகளும்-ஒன்பது அதிதரங்களுநகாண்க

நேரிசை ஆசிரியப்பா.

கனைபொருதொழுகுங்காவிரியாதே
ஆற்றிடைக்கிடப்பதோரலைந்தலையரவே
அரவஞ்சுமப்பதோரஞ்சனவலையே
அம்மலைபூத்ததோரரவிந்தவனமே
அரவிந்தமலர்தொறுமதிசயமுளவே
கடல்விளிம்புடுத்தகண்ணகன்ஞாலம்
உடன்முழுதளந்ததொருதாமரையே
வகிரிளம்பிறையான்வார்சடைதோகைப்
பகிரதிகான்றதோர்பங்கேருகமே

யாவையும்யாவையும்படைக்கநான்முகக்
கோவையீன்றதோர்கோகனகமே
திருமகட்கினிய திருமனையாகிப்
பருமணியிமைப்பதோர்பதுமமலரே
சடைத்தலைதாழ்த்துச்சங்கரனிரப்ப
முடைத்தலைதவிர்த்ததோர்முளரிமாமலரே
ஆங்குமண்டோதரியணிந்தமங்கலநாண்
வாங்கவில்வாங்கியவனைசமுசெமான்றே
விரிந்தபுகழிலங்கைவேந்தர்க்குதகோன்றிசை
புரிந்தருண்மலர்ந்ததோர்புண்டரீகமே
மண்டிணிஞாலமும்வானமுமுட்பட
அண்டமுண்டுமிழ்ந்ததோரம்போருகமே
கடைசெவந்தகன்றுகருமணிவிளங்கி
இடைசிலவரிபரந்தினியவாய்நெடியவாய
இன்பந்தழீஇயவிருபெருங்கமலம்
அன்பந்தழீஇயதொண்டனேனையும்
உவப்படவொருகானோக்கிப்
பவக்கடல்கடக்கும்பரிசுபண்ணினவே

(எ-து) இருகரையும்மோதிப் பச்சிமலாக்கினியாய் வராநின்ற காவேரி யென்றோ ராறுண்டு அந்த ஆற்றினிடத்திலே ஐந்துதலையுடைய வொரு நாகங்கிடக்கும் அந்நாகமானது சுமக்கப்பட்ட வொருநீலமலை அந்தநீலமலையானது செந்தாமரைவனமாய புஷ்பிக்கும் புஷ்பித்த செந்தாமரைமலர்கள்தோறும் ஒவ்வொரு அதிசயமுண்டு அதிலேமுதலாவது கடலை ஆடையாகச்சூழ வுடுத்த விடமகன்றவுலகமுடனெல்லாமளந்த வொரு தாமரையென்னவே வலத்தாளாகுது இரண்டாவது வகிர்ச்சியாக வகிர்க்குபோன்ற இளம்பிறையைத்தரித்த அரனுடைய நீண்டசடையிலே கிரம்பக் கங்கையுமிழ்ந்த வொருதாமரையென்னவே இடத்தாளாகுது மூன்றாவது உயர்திணையஃறிணையாகிய சராசரங்களை யுண்டுபண்ணும் பொருட்டாய் நான்குமுகமுடைய பிரமதேவனைப்பெற்ற வொரு தாமரையென்னவே உதரத்தானமாகுது நான்காவது ஸ்ரீதேவிக்கு அழகியவீடாய் பெரிதாகிய கவுஸ்துவமெனப் பெயர்பெற்ற மணிவிளங்கப்பட்ட வொரு தாமரையென்னவே மார்க்கமாகுது ஐந்தாவது சடைமுடிதாழ்ந்துச் சங்கரனைவ விரந்தபவந்தனைவில் முடையாகி துர்க்கந்தம்பொருந்திய பிரம

வொருதாமரையென்னவே வலக்கையாகுது-ஆறாவது-மண்டோதரியணி யப்பட்டமங்கலசூஸ்திரம்வாங்கவில்லை வளர்ந்த வொருதாமரை யென்ன வேஇடக்கையாகுது-ஏழாவது-மிகுந்தபுகழையுடைய இலங்கைவேந்தனு கிய விடணற்கு வுந்தத்தெற்கின்கண்ணுண்டாகியதிசையைக்கொடுக்கத்த க்கதாகமலர்ந்த வொருதாமரையென்னவேமுகமாகுது-எட்டாவதுநீர்சூழ் ந்தமண்ணும் விண்ணுமுட்பட அண்டமுழுதுமுண்டுமிழ்ந்த வொருதாம ரையென்னவே வாயாகுது-ஒன்பதாவது-இருகடையுஞ்சிவந்து விசாலமா ய்க்கருமையுடையமணிப்பாவைவிளங்கியஇடையிலேசிறிதுசெவ்வரிபரந் து இனியதாயநெடிதாயின் பந்தானேதழுவிய இரண்டுபெரிய தாமரையா னதுவென்னவேகண்களாகுது-அதுதன்பந்தானே தழுவியதொண்டனாகி ய வென்னையும்உவகையுடனேயொருக்கால்பார்த்து ஒருவராலுங்கடப்பித் தற்கரிய பிறவிக்கடலைக் கடக்கும்படி செய்ததென்றவாறு (௭௩)

கார்காலம்வண்டு-கலிநிலைத்துறை

பண்கொண்டவேயூதுசெவ்வா யரங்கேசர்பைப்பொன்னிநாட்
டெண்கொண்டபேராசைதந்தார் மறந்தார்கோலிசைவண்டுகாள்
விண்கொண்டமலைமீதுவிண்மாரிபொழிகின்றவிசைபோலவென்
கண்கொண்டுமுலைமீதுகண்மாரிபொழிகின்றகார்காலமே

(எ-து) பண்ணாகியஇசைபொருந்தியவேய்ங் குழலையூதப்பட்ட சிவந்த வாயையுடைய வரங்கருடையசெழுமைபொருந்தியகாவேரி நதிசூழ் ந்தகாட்டிலேயெண்ணுதலையெய்தியபேராசையைக்கொடுத்த- தலைவரானவ ர்மறந்துவிட்டாரோ-பண்களைமொழியத்தக்கவண்டினங்களே விண்ணளா வியவெற்பின்மேலேவிண்ணிலிருந்துவிண்மழை பெய்கின்ற விசையைப் போலேயென்னுடையகண்பொருந்திய முலையின்மேலே கண்ணிலிருந்து கண்மழைபெய்கின்றகார்காலத்தை—எ-று. (௭௪)

கைக்கிளை-கட்டளைக்கலித்துறை

காரகமோனம்வடதிருவேங்கடக்கார்வரையோ
நீரகமோநெடுவானகமோதுயினீடுபணிப்

போகமோதென்றிருவரங்கப் பெருங்கோயிலென்னும்
ஊராகமோவிடந்தண்காவி னின்றவொருவருக்கே

(எ-து) மேகத்தினிடமோ அன்றியும்-நன்மையையுடைய வடக்கின்கண்ணுண்டாகிய அழகியதிருவேங்கடமென்னு(மை)மேகந்தவழுமலையோமுன்னீரிடமோ நெடிதாகிய வானினிடமோ - தூக்கமிக்க பாம்பினது பெரிதாகிய யிடமோ - அழகிய தெற்குத் திருப்பதியாகிய திருவரங்கமென்னும்பெரியகோயிலாகிய வூரினிடமோகுளிர்ச்சியுடைய காவினிடத்திநின்றவொருத்தியாகிய வொப்பற்றவிவளுக்கிடமாவதென்றவாறு(மின்னற்கொடிபோன்றமையால்இவளுக்கிடங்காரமோவென்றார் வரையமகளிர்போன்றமையால்இவளுக்கிடம்வட திருவேங்கடக் கார்வரையோவென்றான்-நீரமகளிர்போன்றமையால் இவளுக்கிடம்நீரகமோவென்றார்நாககன்னியர்போன்றமையால் இவளுக்கிடம்பணிப்பேரகமோவென்றார் புவிமாதர்போன்றமையால்இவளுக்கிடங்கோயிலென்னு மூரகமோ வென்றாரென்பதுகருத்து) (எ௫)

வஞ்சித்துறை.

ஒருநயம்பேசுவென்-திருவரஙகேசர்தாள்
மருவுமின்னுசமாம்-சருமவன்பாசமே

(எ-து)வாருங்களுலகத்தீரே-சூட்சத்திலேமோட்சமுண்டாகும்படிஒருநயமாகியவுதியம்பேசுகிறேன்திருவரங்கேசருடையதிருவடித்தாமரைநிழலிலேசென்றுசேருங்கள் விளைகியகருமகாண்டத்திலேவலிதாகியவுங்களுடைய ஆசாபாசமெல்லாம்அதமாய்விடும்—எ-று. (௬௬)

எண்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

வாசமாமடியர்பா னேசமாமடிகளும்
பைம்பொனுாடையுஞ் செம்பொன்மாமேனியும்
ஆசையாமலருளாள் வாசமாபக்கமும்
அஞ்சலென்றருள்செயுங் கஞ்சமுங்கருணையின்
தேசுலாவதனமு ம்மாசிலாமுழுவதும்

சிரிதாவெழுதுகத் தூரிநாமமுமெனக்
கீசனார்திருவரங்கேசனார்திகிரியும்
இலகுவெண்சங்குமேயுலகமெங்கெங்குமே

(எ-து) ஆசையாகிய அடியர்கள் இதயமலரிடத்திலே. கேசமாகிய திருவடித்தாமரைகளும்-பசுமையுடைய பீதாம்பரமும் செவ்விதாயழகிய திருமேனியும்பொற்றாமரைப்பூவிலுறையப்பட்டவள்வாசமாகிய மார்பகலமும் பரமென்றடைந்தவர்களைப் பயப்படாதீர்களென்றருள்புரியும் கராம்புயமும் கைதையாகிய தாழம்பூவும்ஒளிவிளங்கிய திருமுகமும்மாசிலாதபுன்முறுவலும்·சிரிதாயெழுதியகஸ்தூரிநாமமும்-எனக்கிறையவனாகிய திருவரங்கேசருடையசக்கராயுதமும்-இலகப்பட்ட வெள்ளியசங்கமுமேதெரியப்பட்டது உலகமெங்கெங்குமென்றவாறு. (எஎ)

வஞ்சிவிருத்தம்.

எங்கணுநிறைந்துறையுமெம்பிரான்
கொங்கணுகிவண்டுமுரல்கோயில்சூழ்
உங்கள்வரையெங்கள்வரையொன்றியே
மங்கையுனகொங்கைகளைமானுமே

(எ-து) எள்ளுமெண்ணெய்யும்போலெங்கெங்கும்நிறைந்துறையப்பட்டஎம்பிரானாகியவரங்கருடையசுகந்தத்துக்காயடைந்து வண்டினங்கள்சத்திக்கப்பட்ட திருவரங்கத்தைச்சூழ்ந்த உங்கள்மலையின் திடமும் எங்கள்மலையின்திடமும்-நெருங்கியிடைமணித்தாயிருப்பதெத்தன்மைத்தென்றால் மங்கையேயுனதுகொங்கையாகியமலைகள் ஒன்றோடொன்று சமீபத்திருப்பதுபோலிருக்குமென்றவாறு. (எஅ)

இரங்கல்-கலிநிலைத்துறை.

மாமனார்கேசன்மேலார்மாலாய்வாழ்கோயில்
தேனேர்காவிற் பூவாராயுந்தேனேபோல்
நானுபோகத் தின்பங்கண்டார்நாள்வாடப்
போனார்வாரா.தேதோர்வோதாய் போதாவே

(எ-து) கங்கையாகியபெண்ணானவள்நிறைந்தசடாசேசத்தையுடையவன்முதலாய் மேலோர்யாரும் அன்பாயடைந்துவாழுந் திருவரங்கத்தினிடத்

தின்தேனுகள்சிறம்பிய பூங்காவிபூவுகடோறு மாராயப்பட்ட வண்டைப் போலவென்னிடத்தில் நானேபோகத்தினிடத்தினின்பநுகர்ந்துஇப்போநான்வட்டமுறும்படி விட்டுப்பிரிந்துபோன தலைவர்வாராமைஎதுகாரணமோ எனக்குச்சொல்லவேண்டும் - போதாவேயென்றவாறு(போதாவென்பது பொருளுரை (௭௪)

மதங்கு-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

போதாவெனக்கெளிதானார் போதவனுக்கரிதானார்
நாதாரங்கர்திருவடித்தா ளடியாங்கிடக்கில்
ஓதுமதங்கிநடித்தாலுள்ளமதங்கியரக்காம்
வேதமறைந்திடவல்லீர் வினையைமறந்துவிடீரே

(எ-து)மிகவும்அடியேனுக் கெளிதானவராய்ப்-பூவபனுகிய பிரமாவுக்கரிதானவராய்ச் சகலபுவனகர்த்தாவாகிய வரங்கநாயகருடைய அழகியதிருவடியைநாடி யரங்கனிடத்திலேநடித்துத்துதிக்கு மதங்கியானவள் அப்படிநடித்தால் உள்ளமானது அக்கினியிலிட்ட அரக்கா யுருகு மாகையால் வேதமோதவல்லவர்களே-வினையைவிரைந்து மெளிப்படாமல் மறந்துவிடக்கடவீர்கள்—எ-று. (௮௰)

பாண்-தாழிசை.

விடாதுபூமடந்தைமார் விரும்பவாயர்மாதர்தோள்
வியந்துமுன்னயந்தவர்க்குவிற்குமெங்கள்கொங்கைதான்
அடாததன்றுபாணவின்ன மங்ஙனன்றியிங்ஙனம்
அரங்கரன்புகூரவின்பமாகவல்லவல்லவே
எடாதிருக்கில்வாய்திறக்குமெங்களையனுச்சிதோய்
எண்ணெய்பட்டமெய்யிலிட்ட முத்துமுத்தரீயம்
படாமுகந்திறந்தசைந்துமழலைவாயின்மணபரூப்
பசுநரம்புபுடைபரந்து பாஸ்சுரந்தலையுமே

(எ - து) விட்டு நீங்காமல் கமலையானவள் விரும்பும் - மார்பையுடைய மாயவனது அழகிய புயத்தை வியப்ப மெய்தி விரும்பி யவர்க்கு விறகப் பட்ட யெங்களுடைய கொங்கையானது அவருக்கு அடுக்காதென்று அடுக்கவே அடுக்குமாகையால் இன்னமும் அவ்விடத்திலிச

ருக்கவிருப்பமின்றி இவ்விடத்திலெய்தியயரங்கரானவர் அன்புகூரும்பக டிக்கு யின்பமாகத்தக்கது கண்டுமெடாமலிருந்தால் வாய்திரந்தழுகுழந் தையாகிய யெங்களையனுடைய வுச்சியிலேதோய்ந்த எண்ணெயானது நு யிலகியனசையாகிற்கும் மழலைமொழி வழங்காநின்ற வாயானது மணமராது பசுமைபெற்ற நரம்பானது பக்கத்திற்பறந்து பால்சுரந்திருக்கு முலையா னதென்றவாறு. (அக)

## இரங்கல் கட்டளைக்கலித்துறை.

முலைகொண்டபான்மணம் வாய்மாறித்தில்லையம்மொய்குழலோ
அலைகொண்டதின்னவென் கையணையேயலையாருவற்றச்
சிலைகொண்டசெங்கை யரங்கேசர்தாள்கொண்டதேசமெல்லாம்
விலைகொண்வாழ்வியாள்சென்றவாறெங்ஙன்வெஞ்சுரமே.

(எ-து) மூலையுண்டபாலினது மணமானது வாய்விட்டு மாறினதில்லை மொய்த்தவளகமானது முடிக்கத்தக்க பருவமின்றி யலையாநிற்கின்றது இ ன்னமுமென்னுடைய கையணையே அலையையுடைய சமுத்திரம்வளர வி ல்லைப்பிடித்த செங்கரத்தினையுடைய அரங்கேசர் திருவடித்தாமரையால் அளந்துகொண்ட தேசமுழுதும் விலைபெற்ற வாள்போன்ற விழியையு டையவளோ எவ்வாறுசென்றாய் இறைவயின்கடிதாகிய காட்டுவழியி லெ ன்றவாறு, (அஉ

## இரக்கல் எண்சீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்-

வெஞ்சமுங்கருதுங் கஞ்சனுமெருதும்
வேழமும்பரியும் வீழமுன்பொருகார்
தஞ்சமென்றவருக் கஞ்சலென்றருளுந்
தாயிலன்புடையார் கோயிலின்புடையார்
மஞ்சுவண்டினமுந் தஞ்சத்தண்டலைவாய்
வல்லியொன்றதிலோ சொல்லியுத்திகழும்
கஞ்சமுண்டதிலே நஞ்சமுண்டதிலோர்
கள்ளமுண்டதுவென் னுள்ளமுண்டதுவே

(எ-து) வெவ்விதாகிய போரைக்கருதுங் கஞ்சனென்பவனையும் சகடா சுரனையும் குவலையாபீடமென்னும் யானையையும் குதிரைவசவாகிய கேசி யென்பவனையும் இறந்துவிழும்படி முற்காலத்திற்பொருதினவர் சரண

மென்றலருக் காரணமாயஞ்சாதியொன் றளிக்குந் தாயிலு மெண்மடங்கதிக மாகிய அன்பினையுடைய அரங்கநாயகருடைய கோயிலின் பக்கத்திலே மேகசாலமும் வண்டினமுந் துயின்மேவும் பூங்காவில் வல்லியாகிய வொருகொடியுண்டு அதிலே இரவின்கட்குவியாமல் மலருந் தாமரைவுண்டு அதிலே ஆலகாலவிஷமுண்டு அந்த ஆல்காலவிஷத்திலே ஒருகள்ளத்தனமுண்டு அதென்னுள்ளத்தை யுண்டுவிட்டது-எ-று. (அங)

முதுவெனிற்காலம்- எண்சீர்க்கழிநெடில்- ஆசிரியவிருத்தம்.

உண்டுமிழ்வாசமுடன் றண்டலைமாருதம்வரு
துலவியசாளரமுங் குலவியவாநிலவுங்
விண்டலர்பூவணையும் மென்பனிநீர்புகழும்
வேனிலுமேமுதிரா வேனிலுவாகியதால்
அண்டர்தொழும்பெருமா ளாம்புயமின்பெருமாள்
புண்டரிகங்கமழுந் தண்டுறையோ திமமே
புன்னைகள் சிந்தலரோ யின்னமுந்தந்திலரே-

(எ-து) தாமரைமணக்குந் தடாகம்பொருந்திய நீர்த்துறையிற்றங்கிய வன்னமே புன்னாகத்திலுதிராநின்ற பூவேசொல்லக்கேதீர் உண்டுமிழ்பட்ட மணத்தினுடனே தண்டலையாகிய காவிற்றவிழ்ந்து மந்தமாருதமானது உலவநின்ற சாளரவாயலுங்குலாவப்பட்ட வொளிபொருந்திய நிலம்முகிழ் விரிந்த பூவாற்செய்தவணையும் மெல்லிதாகியபன்னீரும் புனுகுசவ்வாதும் வேனிலாகிய இரண்டுகாலத்திலுமமுதிரா மேனிலாகிய இளவேனிற் காலமுமாகிய தன்மையாற்றேவர்கள் தொழப்பட்ட பெருமாளானவர் அம்புயமின்னாகிய இலக்குமிகாந்தரானவர் வேதத்துக்குநாயகனானவர் அழகன்மிக்க நம்பெருமாளானவர் இன்னம்வரக்காண்கிலேன் ஏதுசெய்வேனென்றவாறு. (அச)

கூதிர்காலம் வேற்றொலிவெண்டுறை;

இன்னிசைவேயினு மன்னியகோயிலையெய்தார்போற்
பெமன்னினைவாலவர் போனவிடத்தினிற்போகாதே
துன்னியமுகிற்றுளி யென்றன்மேலெலாம்
வன்னியின்பொறிமலை வழங்கும்வாடையே

(எ-து) இனிய இசையைப்பொருந்திய வேய்க்குழலையுடையவனிலை பெம் திருவரங்கத்தினி லினிதுமேற்படவராதவர் போன்றும் பொருள் தேடும் வினைவினுற்றலைவரானவா போனவிடத்திலே போகமாட்டாத மி ன்னப்பட்ட மேகமும்மழையும் ஒன்றுமென் மெய்முழுதும் நெருப்பி ன்பொறிகளை வழங்கப்பட்ட வாடையான விக்காற்றென்றவாறு. (அ௫)

கார்காலம்-அறுசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்,

வாடையாயிரு பனியுமாய்வேனிலால் வந்ததுகாரொன்றே
பேடைமாமயிற்சாயலாயன்பர்மேற் பிழைகருதிடல்செம்பொற்
ஆடைநாயகன் திருமணுயக ணரங்கனுயகனேறும்
ஓடைமாவிதுமதமிதுபுளிரிய வொலியிதுமழையென்றே

(எ-து) கூதிர்காலம் முன்பனிக்காலமும் இளவேனிற்காலமும் முதிர் வேனிற்காலமுமாகிய ஐந்துபருவமும்போய் இக்கார்காலமாகிய பருவம் வந்துநேர்ந்ததென்று சாயலினாலே பெண்மயிலையொப்பாதல் தலைவமை துதமைநினையக் கடவதென்று பொன்னிண்பீதாம்பரத்தைதரித்த நாய கன்திருமகளாகிய சீதெவிநாயகன் அக்கமாகியகோபிக்கு நாயகன் அவ னேறப்பட்ட பொற்பட்டங்கட்டிய நெற்றியினுடைய யானையிதுமேகம ன்று மதகலமிதுமழைநீயென்று பிளிறிடப்பட்ட வோசையிது இடியோ சையன்று ஆகையால் மழையானது என்று மறுத்ததென்றவாறு (அசு)

கட்டளைக்கலித்துறை.

மழைபொன்மரகதம்போ லெம்பிரான்வளர் கோயிலன்னீர
பிழையோமிவர்க்கிதை யாருரைப்பாரிவர்பின்வந்தெய்த
தழைபோயுரைத்த வருத்தம்பொறுமைகொள்சங்கான்பால்
உழைபோயொதுங்க முயல்போமதிப்புக் கொளித்ததுவே.

(எ-து) இருண்ட மழைமேகம்போலவும் மரகதமாணிக்கமாலை போல வும் எனக்குப்பிரனானவர் கண்மருளுந் திருவரங்கத்தை யொப்பீர்கள் கு ற்றந்தீர்த்த உரைக்குரையா குரைக்கத்தக்கவர் யாலரொருவயு முரைக்கத் தக்கவரொன்று ஆதலாலிவர்பின்னுகவந்து துடர்ந்தெய்த மாந்தழையான து சென்றுபட்டுரைத்த வருத்தம்பொருமையினு லன்றோ மானனது

ஈசுரன்கையிற் போயொளிக்கவும் முயலானது சந்திரனிடத்திற்போயொளிக்கவுமான காரணமென்று தலைவன்தலைவியானவள் சகியாடித் தனது தோழியருக் குரைத்த தென்றவாறு. (அஎ)

கார்காலம்-எண்சீர்க்கழிநெடி-லாசிரியவிருத்தம்.

ஒளிகருமிரு சுடர்க்கவளம் விழுங்கும்பேழ்வாம்
  உருமுழக்கத் திந்திரவிலோடைநெற்றித்
துளிக்குமழை மதக்கோண்மூக் களிற்றைமின்னல்
  தோட்டிமாருகப்பாகர் தூக்குங்காலம்
அளிக்குலமுங் களிக்குமயற் குலமும்பாடி
  ஆடுபொருற் றிருவரங்கரணையாக்காலம்
விளிக்குமலைக்கருங்கடலு மொருக்குங்காலம்
  வினையேற்குவிழிகடுயில் மேவாக்காலம்

(எ-து) தன்னுள் ஒளிக்கு தலையுடையசந்திராதித்தரென்னு மிரண்டு கவளத்தையும் விழுங்கியகன்ற வாயிகிடத்துள்ளயிடியே பிளிறப்பட்டமுழக்கமாய் இந்திரதனுசே நெற்றிப்பட்டமாய்ப் பெய்யப்பட்டமழையே மதசலமாய்வரப்பட்ட மேகமென்னும் யானையை மின்னலாகிய அங்குசத்தினலே காமறென்னுமயானைப்பாகர் துறக்கொண்டு செல்லும்காலம் வண்டினங்கள்பாடவும் அதுகண்டு களிம்பிணையுடைய மயில்களாடவும் ஆகியமொழில்சூழ்ந்த திருவரங்கரான வாணையாதகாலம் சத்திக்குமலையினையுடைய கருங்கடலுமொருக்கப்பட்ட காலமிகுந்த வினையைச்செய்த வெனக்குவிழிகளானது துயில்பொருந்தாக்கால மென்றவாறு.—(இதன்கருத்து) இகதன்மையாகிய கார்காலம் அரங்கநாயகரணைவாராகில் கடலுமொருக்க வேண்டுவதில்லை கண்ணுறங்காமை வேண்டுவதில்லை யென்றறிக. (அஅ)

இளவேனிற்காலம்-கலிநிலைத்துறை.

மேவலர்வாழ் தென்னிலங்கை மலங்கவொரு காலிருகால்
  விற்குனிதவெய்
ஏவலர்வாழ் திருவரங்கத் தெனமயிருத்திப் போனவர்நாட்
  டில்லைபோலும்
கோவலர்வாய்க் குழலோசைக் காவிரிகள் செவியெங்குங்
  குறும்புன்மாலைப்

பூவலரின் மணம்பிறப்பி யிளவேனில்வரவந்த
பொதியத்தென்றல்.

(எ-து)மேவலராகிய பகைஞர்வாழப்பட்ட தென்னிலங்கையை மலங்கவொருதா மிருகோடியுமொருகோடியாய்வளையவில்லைவளைத்தெய்யு மம்பினால்வல்லராகிய இடையருடைய வாயினாலூதும்வேய்ங்குழ லோசையைப்பசுவினிரைகள் செவியிலுறவோக்குங் கொஞ்சத்தன்மை பொருந்திய புன்மையாகிய மாலைப்போதிற் புட்பிக்கப்பட்டபூவின்மணங்களைப்பரப்பிக்கொண்டு இளவேனிற்காலம் வருமளவில் வரவந்த பொதியமலைத்தென்றலா மதென்றவாறு. (௮௯)

இரங்கல்-கட்டளைக்கலித்துறை.

தென்றலைக்குங்குமச்சேற்றைப் பொருள்சிறியாள்பெரிய
துன்றலைக்குந்துடிக்கும்மென் செய்வாடியராலழைத்த
வன்றலைக்குஞ்சரங்கரத்தா யிலங்கைமலங்கவளைத்
தன்றலைக்குஞ்சரத்தா யரங்காவண்டராதிபனே.

(எ-து)தென்றலாகிய காற்றையுங்குங்குமமாகிய சேற்றையும் பொருக்கமாட்டாள் மிகவுஞ்சிறியதன்மையையுடையாளாகையாற்பெரிதாகியநெருங்கிய அலைகடலினதுவோசைக்கு மனதுதுடிப்புமென் செய்தாற்றுவள் துன்பத்தினாலேமெய்யென்று வோலமிட்டழைத்த வன்மைபெற்றதலையினையுடையயானையை இரட்சித்தவரோஇலங்கையானது கலங்கவளைத்து அப்போதலைத்தபாணத்தையுடையவனே அரங்கமாகிய நகரையுடையவனே தேவதேவாதிபனே தேவரீர்சித்தமிரங்கவேண்டுமென்றவாறு. (௯௰)

கட்டளைக்கலிப்பா.

அண்டர்போற்றுந் திருவரங்கேசனார்
அணியரமகத் திருமுற்றமெய்தினால்
பண்டுபோனவளை யாழிவாங்குவன்
பாலியாதுபராமுகம்பண்ணினால்
தண்டுவாளுஞ் சிலையுமிருக்கவே
சங்குமாருயுந் தாருமென்பேனவை

தொண்டருக்கொற்றிவைத் தோமென்றோதினல்
துளவமாலையைத் தொட்டுப்பரிப்பனே

(எ-து)தேவர்கள்போற்றிசெய்யுந்திருவரங்கேசராகிய நம்மணியானவர் அழகினையுடைய நம்மனமாகியமுற்றத்தினிடத்தி லெழுந்தருளப்பெற்றேனுகில்என்கையைவிட்டுமுன்னேசுழன்றுபோனவளையலையும்யாழியாகியமோதிரத்தையுந்தாருமென்றுவாங்கிக்கொள்ளுவேன் - அதற்குக்கிறுபைபண்ணுமற் பராமுகம்பண்ணினலதற்குப்பதிலாயத்தண்டும்-வாளும் வில்லும்-இருக்கட்டுஞ்சங்காழியாகியசங்குசக்கரத்தையும் தாருமென்பேன் அதையடியார்களுக்குஒற்றிவைததோமென்றுரைத்தால் துளவமாலையைத் தொட்டுபறித்துக்கொள்ளுவேனென்றவாறு (௬௧)

கலித்துறை.

தொட்டுண்டதயிர்வெண்ணெய்க் கன்ராச்சியுரலோடுசூழ்க்துகட்டக்
கன்டுண்டுகழலவிகமறியாமலிருந்தழுதகள்வன்யாரோ
கட்டுண்டானரங்கனெனக்கட்டுரைப்பாராலுங்கைகூடி.
மட்டுண்டகொன்றையான் மலர்மேலானறிவறியவடிவனன்றே

(எ-து)அள்ளியுண்டவெண்ணெய்க்காக அப்போது ஆச்சியாகிய அசோதைஉரலுடன்வரிந்துகட்டக் கட்டுப்பட்டுக்கழலும்படிவகையரியாமலிருந்தழுதகள்வனைக்கட்டுப்பட்டனரங்கனென்றுகட்டுவார்த்தைச்சொல்லிவாராகிலுங்களிப்பினையுடையவண்டுசாதிகள் சத்திக்கப்பட்ட தேனிரம்பிய கொன்றைமாலையைத்தரித்தசிவனும்உந்திக்கமலத்தின் மேலுறைந்தவயனும்அறிதற்கரியவடிவத்தையுடையவனுமென்றவாறு (௬௨)

அறுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

வடியாதபவக்கடலும்,வடிந்துமூலை
மாயைகடந்தப்பாற்போய் வைகுந்தஞ்சேர்ந்
தடியார்கள்குழாங்கூடி யுனதடிக்கீழ்
அடிமைசெயுமக்கால மெக்காலந்தான்
கொடியாடுமணிமாட வயோத்திமூதூர்
குடிகிறக்கு திருவரங்கக்கோயில்கொண்ட
நெடியோனேயடியேனுன் முயற்சியின்றி
நின்னருளேபார்த்திருப்பனீசனேனே

(எ-து) துவசங்களாகப்பட்ட நவரத்தினமணிகளாலிழைத்தமாடமாளிகை கூடகோபுரம்நிறைந்த அயோத்தியாபுரியை விட்டுக்குடிவாக்கி திருவரங்கமாகிய கோயிலினிடத்திலேகுடிகொண்டருளிய நெடிதானவனே அடியேனுலாக வேண்டியமுயற்சியில்லாமல் உனதுதிருவருள்தானே பாருமென்றுபார்த்திருந்த கடையேனொருக்காலும் வடிவதற்கரியபிறவிக்கடலைக்கடந்து போய்மூலப்பிறகிருடையையுங் கடந்து அதற்கப்பாலாகியவைகுந்தத்திற் சேர்ந்துஉனதடியார் கூட்டத்துடனே கூடிஉனதுதிருவடியின் கீழடிமை செய்யத்தக்க அக்காலமானது யெக்காலங்கிடைக்குமோ வறிகிலேனென்றவாறு, (சுங)

கட்டளைக்கலித்துறை

நீசச்சமணர்க்குஞ் சூனியவாதற்குநீதியற்ற
பூசற்பௌத்தர்க்குஞ் சைவர்க்குமியார்க்கும்புகலுகின்றேன்
நாசப்படாவுயிரெல்லாமுதற்றந்த நாதன்கண்டீர்
ஆசற்றசீரரங்கத் தாதிமூலத்தரும்பொருளே.

(எ-து) நீசத்துவமானசமணர்க்கும் மாயாவாதியர்க்கும்நீதியையற்ற பூசலாகியபேரையுடைய பவுத்தருக்கும் மற்றுமுள்ளஎல்லாச்சாதியாருக்கும் மெடுத்துரைக்கின்றேன் குற்றமற்றசீரங்கத்திற்சிறந்த வனாதியாகிய ஆதிமூலத்தரும்பொருளானவனே அழிவில்லாதசிவ கோடிகளையுமுன்னமே யுண்டாகிய நாதன் கண்டீரென்றவாறு. (சுச)

நேரிசைவெண்பா.

அரும்புண்டரீகத் தடியிணைக்கென்னெஞ்சம்
இரும்புண்ட நீராவதென்போ-விரும்பி
அரங்கிருந்துங் கோயிலரங்காவுனைநான்
மறந்திருந்து மேற்பிறவாமல்.

(எ-து) அரிதாகியதாமரையையொத்த உனதுதிருவடிகளில் விருப்பமாய் என்னிதயமானது இரும்புண்டநீருக்கொப்பாய்மீண்டுவராத தென்றைக்கோ புண்ணியமானது திருந்தத்தக்ககோயிலையுடையவரங்கனே உன்னைமறந்திருந்து இனிமேற்படப்பிரவாமைக்கென்றவாறு (சுரு)

கலிவிருத்தம்.

பிறவியெனுங்கடலழுந்திப் பிணிபசியோடிந்திரியச்
சுறவனுங்கக்கொடுவினையின் சுழலகப்பட்டுழல்வேனை
அறமுடையாயென்னப்பா வரங்காவென்றருயிருக்
குறவுடையாயடியேனை யுய்க்கொள்வதொருநாளே.

(எ-து) பிறவியென்னப்பட்ட சமுத்திரத்திலே யழுந்திப்பிணிப்பசியுடனே இந்திரியமாகிய சுருமீனுனது விழுங்கக்கொடியவினையாகிய சுழியிலகப்பட்டுச் சுழலக்கடவேனோதருமசுரூபமானவனே யெனக்கு அப்பனானவனே யென்னுடையவுயிருக்குமவானவனே அடியேனையுமொருபொருளாயுய்யக்கொண்டருள்வதுக்கொருநாளுமுண்டாகுமோ வென்றவாறு.

எழுசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்

ஒருபொருளல்லே னிருவினையுடையே
னுனதுதொண்டெனுந் துறைகுளித்துன்
பெருகுதண்ணளியின் பாசந்தொட்டிழிந்து
பெரியதோர்முத்தியான்பெற்றேன்
திருவுமாமணியுஞ்சங்கமுமேந்திச்
செய்யதாமரை பலபூத்துச்
கருநிறமுடைத்தாய் நதிபொருதரங்கங்
கலந்ததோர் கருணைவாரிதியே

எ-து அடியேன்யாதொரு தன்மையான பொருளானவ னன்றுஇறக்கிறதும் பிறக்கிறதுமாகிய இரண்டுவினையையுடையேனுலால் உனதடிமைத திறமாகிய துறையினிடத்திற்சென்றுகுளித்துப்பெருக்கப்பட்ட உனதருளாகிய கயிற்றைப்பற்றியிழிந்து பெரிதாயொப்பற்ற சங்காழியென்னுமடையாள முத்திரையைப்பெற்றேன் சிதேவியும் பெருமைமிக்க கவுத்துவமணியுஞ் சங்கமும்விளங்கிய அவயமாகிய பலபலசிவந்த தாமரைகளும் பூத்துகரியவண்ணத்தைப்பொருந்திக் காவேரியாகிய ஆற்றினலைபொருதப்பட்ட வரங்கனிடத்திற் கலந்தருளியவொப்பற்ற வொருதனி முதலாகிய்கருணைக்கட லானவனேயென்றவாறு. பின்னுமிதற்கே யுரைதிருவாகியலட்சுமியும் பெருமைமிக்கமணியுஞ் சங்குந்தோன்றிச் சிவந்ததாமரைகள்பலவும் பூத்துக் கருநிறம்பெற்றுநதியிற்புறப்பட்ட அலையோடுங்கலந்த கருணையுடையகடலே அடியேனொருபொருளையுடையவனன்று மிகவுமேழையே னுதலால் உனதுதொண்டனெனும்பெயரையுடைய துறையிற்குளித்து அன்னமாளாமற்பெருகிய விரகத்தைச்செய்யு மாதாவாகிய தண்ணளியின்கயிற்றைப்பிடித்து மூழ்கிப்பெரிதாகியவொப்பற்றமுத்தென்னும்பிரயோசனத்தை யடைந்தேனென்று கடலுக்குமரங்கர்க்குஞ் சிலேடைசொல்லிய வாறறிந்துகொள்க

கட்டளைக்கலித்துறை.

வாரியரங்கம்வருதிருப்பாவைக்குமண்மகட்குஞ்
சீரியரங்கன்வளர்திருகோலமுந்தென்றிருக்கா
வேரியரங்கவிமானமுங்கோயிலு மேவித்தொழார்
பூரீயரங்கம்ர் கண்ணிரண்டாவனபுண்ணிரண்டே

(எ-து) திருப்பாற்கடலாகியவிடத்திலவதாரஞ்செய்த திருவாகியசித்திரப்பாவைபோன்ற ஸ்ரீதேவிக்கும் பூதேவிக்குமணாளராகியசிறப்பினையுடையவர் திருக்கணவளர்ந்தருளியசிங்காரமும்தெற்குத் திசைக்குத் திருப்பதியாகியதிருக்காவேரிசூழ்ந்த திருவரங்கேசருடைய கனவிமானத்தினையுந் திருக்கோயிலையுமேவித்தொழாதவரெவர்களோ அவர்கள்முகத்திலிரண்டு கண்களென்றுண்டாகியவிரண்டுமிரண்டுபுண்களென்றுண்டானவையென்றவாறு. (௬௮)

நேரிசைவெண்பா.

புண்ணுருடற்பிறவி போதுமெனக்கும்முனக்கும்
எண்ணிருந்ததினிப்போதுமை கண்ணு
குழற்காளாதென்னரங்கக் கோயிலாநின்பொற்
கழற்காள நின்றேனைக்கா

(எ-து) துர்க்கந்தமாகியபுண்ணினுல்நிறைந்த தேகத்தையுடைய ஜெனனமானதுஇனியடியேனுக்குப்போதுந்தேவரீருக்கும்இவப்படிஜெனனமரணத்திறகுரியவன்றிகிரியைப்போலத்திரியலாமோவென்றுசற்று மிருதயத்திலெண்ணியிரக்காமலிருந்ததுஇனிப்போதுங்கண்ணனே வேணுநாதப்பிரியனாகியவிடலையேதெற்குத்திசைககுத்திருப்பதியாகியதிருவரங்கமென்னுங்கோயிலையுடையவனேதேவரீருடைய அழகிய திருவடிகளாக இப்போதுஅடியேனைக்காககவேண்டுமென்றவாறு. (௬௯)

கலிநிலைத்துறை

காவிரிவாய்ப்பாம்பணைமேற் கருமுகில்போற்கண்வளருங
கருணைவள்ளல்
பூவிரியுந்துழாயரங்கர்பொன்னடியேதஞ்சமெனப்
பொருந்திவாழ்வார்
யாவரினுமிழிகுலத்தோராணலுமவர்கண்டீர்
இமையநாட்டத்
தேவரினுமுனிவரினுஞ் சிவனயனென்றிருவரினுஞ்
சீரியோரே

(எ-து)காவேரியென்னுமாற்றினிடத்திலே பாம்பணையாகிய சேஷசயனத்திற் றிருக்கண்வளர்ந்தருளிய கருணாநிதியாகியவள்ளலான ஸ்ரீரங்கநாயகருடைய் பூமலர்ந்தபூந்துழாய்மாலைபொருந்தியபொன்னையொத்த திருவ

டியேதஞ்சமென்றடைந்து வாழப்பட்டவர் என்குலத்துள்ளாரிலுமிழிகு
லிழிகுலத்தோராயினும் அவர்களேகண்டீர் இமையாநாட்டத்தினையுடை
யதேவர்களிலேயுஞ்சிவனையனென்றுரைக்கப்பட்ட விருவரிலேயுஞ் சிறப்
பினையுடையவரென்றவாறு. (௱)

கட்டளைக்கலித்துறை.

தரங்கதரினின்று தளருமென்னாவிக்குன்றாமரைத்தா
ளிரங்கித்தருவதெக்காலஞ் சொல்லாயெழுபாருமுண்டு
பரங்கொட்டோராலினும் பாலாழியினும்பசும்பொன்னிரு
வரங்கத்தினுந்துயில்வா யச்சுதானந்தகோவிந்தனே

(எ-து) தரங்கமாகிய அலைபோலலைந்து தளர்ச்சியையடையும் அடியேனு
டையவாவிக்காதாரமாக உனதுபாதாரவிந்தத்தையிரங்கித்தருவதெக்கால
மோசொல்வாயாக ஏழுலகமுண்டு அங்கிங்கெனந்தோன்றாமல் ஓராலிலைமே
பாற்கடலிற்றுயிலும் பசுமைபொருந்தியகாவேரிசூழ்ந்த திருவரங்கத்தினி
டத்திலுந் துயின்றருளிய அச்சுதானந்தகோவிந்தனான அரங்கநாயகனே
யென்றவாறு பரங்கொட்டென்பதற்கு சகலபுவனசராசரங்களுந்தனது குட்
சிக்குளடக்கித்தானேபரமாயிருந்தானென் றுரைப்பினுமமையுமென்க. ()

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவண்ணவிருத்தம்.

மழைமுகிலெனவே பணாமுகத்திகழ்
வரியரவணையேறி வாழரங்கர்தம்
எழில்பெறுமிருதா ளிலேகலம்பகம்
எனுமொருதமிழ் மாலைதானணிந்தனன்
குழலிசையளிமேவு கூரம்வந்தருள்
குலபரனிருபாத போதடைந்தவன்
அழகியமணவாளர் தாசனென்பவன்
அடியவரடிசூடி வாழுமன்பனே.

(எ-து) மழைமேகம்போன்றவண்ணராய்ப்பணாடவியையுடையவரிபொ
ருந்தியபாம்பணைமேலேறி இனிதாயமர்ந்துவாழும் அரங்கநாயகருடைய
வெற்றிபெற்றஇருபாதாம்புயங்களிற்கலம்பகமென்னும் பாமாலைசாத்திய
வனிவன் குழலிசையும்வண்டிசையுமேவும்வளஞ்செறிந்தகூரமாகிய நக
ரிலுள்ள குருபரனுடையதிருவடிகளையடைந்தஅழகியமணவாளதாசனெ
ன்றும்பேர்பெற்ற அடியவருக்கடியவருடைய திருவடிச்சூடிவாழும்அன்
பனானவனென்றவாறு. (௱௨)

திருவரங்கக்கலம்பகம்-மூலமும்-உரையும்.

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# பாடல்அகராதி.

பாடல்அகராதி-முற்றிற்று.